
# சோதிட மலர்

## SOTHIDA MALAR



| | | | |
|---|---|---|---|
| செவ் | சுக் | புத | சூரி<br>குரு |
| சந் | பிரமோத வருஷ<br>ஆனி மீ | | லக்<br>கேது |
| ராகு<br>சனி | | | |
| நெப்<br>யுரே | | | |

இவ்விதழில்............

- ❋ இம்மாதம் உங்கள் பலன்
- ❋ ஜா சத்தில் வியாபாரம்
- ❋ இம்மாத வானியற் காட்சிகள்
- ❋ வெளிநாட்டு வாய்ப்புண்டா?
- ❋ ஆய்வு மன்றம் ❋ சந்தேக நிவிர்த்தி
- ❋ சோதிட அறிவுப் போட்டி
- ❋ சோமரும் சோதிடரும்

இன்னும் பல

(15-6-90 முதல் 16-7-90 வரை) விலை ரூபா: 5-00

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 13 ❋ இதழ் 3

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

பிரமோத ஸ்ரீ ஆனி மீ
( 15 - 6 - 90 )

குஶாநு ரூபெ ஹஸ்தெ வாணாரவிந்த
ஹாஜாஶோர காரணோர்வ பஞ்சணோ
வந்தே
நாஶாய ஸவப்ரவிவஶாஶேவி நளவி நிகத்ர
ஶ்ராஶாந கெஶவ ஸுவம் ஸுவஶ்ரெநக
நாயஷு॥

❋ ❋ ❋

சீராரும் சதுர்மறையும் தில்லை வாழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமேலாமீடேற
வாரநமணிமன்று ளேடுத்த திருவடிபோற்றி

❋ ❋ ❋

✳ செல்வத்துக்கு நன்னடத்தையும் நாணயமும்; சௌரியத்திற்கு வாயடக்கமும்; அறிவுக்கு அமைதியும்; கல்விக்கு வணக்கமும் பணிவும்; தபத்திற்குப் பொறுமையும்; வீரத்திற்கு மன்னித்தலும்; தர்மத்திற்குப் பலன்கருதாமையும் அணிகலனும்மழகுமாகும்.

## திருமஞ்சன காலம்

திருவம்பலத்துள் நிறைந்திலங்கும் ஒருவனாய் விளங்கும் தாண்டவ மூர்த்திக்குரிய ஆறு திருமஞ்சனக்காலங்களுள் உத்தரத்திருமஞ்சனம் இரவு அபிஷேகமாகி மறுதினம் உதயத்தில் அம்பிகையுடன் தர்சனம் கொடுப்பது சிவகாமிசமேத நடராஜப்பெருமானின் அருட்செயலாகும்; மங்கலமான அபிஷேகப் பொருட்களிலும், மந்திர வேதங்களால் ஜபிக்கப்பட்ட கும்ப நீரினும் அபிஷேகம் செய்து உதயத்தில் அலங்கார பூஷணராக அம்பிகையுடன் விளங்கும் ஆனந்தக் கூத்தனை இப்புனித ஆனி உத்தரநன்னாளில் கண்டானந்தித்து இறையருள் பெறுவோமாக.

## நல்வழி நான்கு

தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றால் கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே யறி.

எண்ணி ஒரு கருமம் யார்க்குஞ்செய வொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணில்லான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு.

உள்ளது ஒழிய ஒருவருக்கொருவர் சுகம்
கொள்ளக்கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டு கரையேறி னல்என்
உடலோடு வாழும் உயிர்க்கு.

தேவர் குறளும் திருநாள் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்.

## கலை. கலாசாரம்

நாள்தோறும் வளரும் நினைவுக்கு அல்லது செயலுக்கு 'கலை' என்று அழைக்கப்படுகிறது. இதையிட்டே சந்திரனை சந்திரகலா என வர்ணிக்கின்றோம். உயர்ந்த எண்ணம் வளர்ந்து வளர்ந்து உயர்ந்த சிறந்த பல கலைகளாக உருவெடுக்கின்றது. சங்கீதம், நாட்டியம், சித்திரம், இலக்கியம் இவைகள் ஒவ்வோர் விதத்திலான ஒவ்வோர் உருவங்களாகும். உயர்ந்த எண்ணம் மட்டும் இருந்துவிட்டால் அது சித்திரமாக சங்கீதமாக தியாகமாகவெல்லாம் உருவகித்துவிடுகின்றன. சாந்தநிலை எய்துவதும் ஓர் உயர்கலையாகும். இவ்வாறே எல்லா உயிர்களிடத்தும் அன்பு மோகம் முழுதும் ஒன்றுவதற்கு கலை, கலாசாரம் என்று சொல்லப்படுகிறது.

# பிரமோத வருஷ ஆனி மாத கிரக நிரயன ஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5-30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனும்சம் 23 பா 43கலை 36விகலை)

| தேதி ஜூன் | தேதி ஆனி | நாக்ஷத்ர நேர பகல் 12-00 ம. நி. செ | சூரியன் ☉ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | 5 33 8 | 1 29 55 | 10 15 0 | 11 16 57 | 1 11 7 | 2 22 3 | 0 24 28 | 9 0 20 | 9 15 59 | 8 14 27 | 8 20 0 |
| 16 | 2 | 5 37 5 | 2 0 53 | 10 28 21 | 17 40 | 12 50 | 22 16 | 25 38 | 0 17 | 15 56 | 14 25 | 19 59 |
| 17 | 3 | 5 41 2 | 1 50 | 11 12 6 | 18 23 | 14 35 | 22 29 | 26 49 | 0 13 | 15 53 | 14 23 | 19 57 |
| 18 | 4 | 5 44 58 | 2 47 | 11 26 13 | 19 6 | 16 24 | 22 42 | 28 0 | 0 9 | 15 50 | 14 20 | 19 56 |
| 19 | 5 | 5 48 55 | 3 45 | 0 10 43 | 19 49 | 18 15 | 22 55 | 29 10 | 0 6 | 15 47 | 14 18 | 19 54 |
| 20 | 6 | 5 52 51 | 4 42 | 0 25 31 | 20 32 | 20 8 | 23 9 | 1 0 21 | 0 2 | 15 44 | 14 16 | 19 53 |
| 21 | 7 | 5 56 48 | 5 39 | 1 10 30 | 21 15 | 22 4 | 23 22 | 1 32 | 8 29 58 | 15 41 | 14 13 | 19 51 |
| 22 | 8 | 6 0 44 | 6 37 | 1 25 34 | 21 58 | 24 3 | 23 35 | 2 43 | 29 54 | 15 38 | 14 11 | 19 49 |
| 23 | 9 | 6 4 31 | 7 34 | 2 10 31 | 22 40 | 26 3 | 23 48 | 3 54 | 29 50 | 15 35 | 14 8 | 19 48 |
| 24 | 10 | 6 8 37 | 8 31 | 2 25 13 | 23 23 | 28 6 | 24 1 | 5 5 | 29 46 | 15 32 | 14 6 | 19 46 |
| 25 | 11 | 6 12 34 | 9 28 | 3 9 35 | 24 5 | 2 0 11 | 24 15 | 6 16 | 29 42 | 15 29 | 14 4 | 19 45 |
| 26 | 12 | 6 16 31 | 10 26 | 3 23 30 | 24 48 | 2 17 | 24 28 | 7 27 | 29 38 | 15 26 | 14 1 | 19 43 |
| 27 | 13 | 6 20 27 | 11 23 | 4 7 0 | 25 30 | 4 25 | 24 41 | 8 38 | 29 34 | 15 23 | 13 59 | 19 41 |
| 28 | 14 | 6 24 24 | 12 20 | 4 20 3 | 26 12 | 6 34 | 24 54 | 9 49 | 29 30 | 15 20 | 13 56 | 19 40 |
| 29 | 15 | 6 28 20 | 13 17 | 5 2 45 | 26 54 | 8 44 | 25 8 | 11 0 | 29 26 | 15 16 | 13 54 | 19 38 |
| 30 | 16 | 6 23 17 | 2 14 14 | 5 15 7 | 11 27 36 | 2 10 54 | 2 25 21 | 1 12 11 | 8 29 22 | 9 15 12 | 8 13 51 | 8 19 37 |
| 1 | 17 | 6 36 13 | 2 15 12 | 5 27 16 | 11 28 18 | 2 13 5 | 2 25 34 | 1 13 23 | 8 29 18 | 9 15 9 | 8 13 49 | 8 19 35 |
| 2 | 18 | 6 40 10 | 16 9 | 6 9 15 | 29 0 | 15 16 | 25 48 | 14 34 | 29 13 | 15 6 | 13 47 | 19 33 |
| 3 | 19 | 6 44 6 | 17 6 | 6 21 8 | 29 41 | 17 26 | 26 1 | 15 45 | 29 9 | 15 3 | 13 44 | 19 32 |
| 4 | 20 | 6 48 3 | 18 3 | 7 3 0 | 0 0 23 | 19 36 | 26 15 | 16 47 | 29 5 | 15 0 | 13 42 | 19 30 |
| 5 | 21 | 6 52 0 | 19 0 | 7 14 54 | 1 4 | 21 46 | 26 28 | 18 8 | 29 0 | 14 57 | 13 39 | 19 29 |
| 6 | 22 | 6 55 56 | 19 58 | 7 26 53 | 1 46 | 23 54 | 26 41 | 19 20 | 28 56 | 14 54 | 13 37 | 19 27 |
| 7 | 23 | 6 59 53 | 20 55 | 8 8 58 | 2 27 | 26 2 | 26 55 | 20 31 | 28 52 | 14 51 | 13 34 | 19 25 |
| 8 | 24 | 7 3 49 | 21 52 | 8 21 12 | 3 8 | 28 8 | 27 8 | 21 43 | 28 47 | 14 48 | 13 32 | 19 24 |
| ஜூலை 1990 9 | 25 | 7 7 46 | 22 49 | 9 3 36 | 3 49 | 3 0 13 | 27 22 | 22 54 | 28 43 | 14 44 | 13 30 | 19 23 |
| 10 | 26 | 7 11 42 | 23 46 | 9 16 12 | 4 30 | 2 16 | 27 35 | 24 6 | 28 39 | 14 40 | 13 27 | 19 20 |
| 11 | 27 | 7 15 39 | 24 44 | 9 18 59 | 5 11 | 4 17 | 27 49 | 25 18 | 28 34 | 14 37 | 13 25 | 19 19 |
| 12 | 28 | 7 19 35 | 25 41 | 10 12 0 | 5 51 | 6 17 | 28 2 | 26 29 | 28 30 | 14 34 | 13 22 | 19 17 |
| 13 | 29 | 7 23 32 | 26 38 | 10 25 15 | 6 32 | 8 15 | 28 16 | 27 41 | 28 25 | 14 31 | 13 20 | 19 16 |
| 14 | 30 | 7 27 29 | 27 35 | 11 8 46 | 7 12 | 10 12 | 28 29 | 1 28 53 | 28 21 | 14 28 | 13 18 | 19 14 |
| 15 | 31 | 7 31 25 | 28 32 | 11 22 32 | 7 53 | 12 6 | 28 43 | 2 0 5 | 28 16 | 14 24 | 13 15 | 19 12 |
| 16 | 32 | 7 35 22 | 2 29 30 | 0 6 35 | 0 8 33 | 3 13 59 | 2 28 56 | 2 1 17 | 8 28 12 | 9 14 20 | 8 13 13 | 8 19 11 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஆனி மாதம் 1-ந் தேதி முதல் 32-ந் தேதிவரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53 6...53 | 6...53 7...53 | 7...53 8...53 | 8...53 9...53 | 9...53 10...53 | 10...53 11...53 | 11...53 12...53 | 12...53 1...53 | 1...53 2...53 | 2...53 3...53 | 3...53 4...53 | 4...53 5...53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்நேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

************************************

# நாள் நலமா?

************************************

ஆனி 1 வெள் (15-6 90) ஸப்தமி இரவு 10-51வ. சதயம் பகல் 2-34 வ. சித்தம், கரிநாள். சுபகருமங்கட்கு நன்று. ராகு 10 23—11 57

ஆனி 2 சனி (16-6-90) அஷ்டமி இரவு 9-36வரை பூரட்டாதி-மரணம் பகல் 2-17 வ. அசுபதினம். ராகு 8-53—10-27

ஆனி 3 ஞாயி (17-6-90) நவமி மாலை 7-42 வரை, உத்தரட்டாதி பகல் 1-21 வரை. அமிர்தம், சுபதினமன்று. ராகு 4-24—5.58

ஆனி 4 திங் (18-6-90) தசமி மாலை 5-14 வரை, ரேவதி பகல் 11-50 வரை, சித்தம், நற்கருமங்கட்கு உகந்ததினம் ராகு 7 24—8-58

ஆனி 5 செவ் (19-6-90) ஏகாதசி பகல் 2-17 வரை, அசுவினி காலை 9-48 வரை, அமிர்தசித்தம், ஸர்வ ஏகாதசி விரதம் வயற்கருமங்கள் செய்யலாம். ராகு 2-54—4-28

ஆனி 6 புத (20-6-90) துவாதசி பகல் 10-59 வ. பரணி காலை 7-22 வரை, கார்த்திகை பி.இ. 4-42 வரை. சித்தாமிர்தம், பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம், கரிநாள் அசுபதினம். ராகு 11-54—1-28

ஆனி 7 வியா (21-6-90) திரயோதசி காலை 7-28வ சதுர்த்தசி பி.இ. 3-53 வரை, ரோகிணி பி.இ. 1-57 வரை, மரணம், அசுபதினம். ராகு 1-24—2-58

ஆனி 8 வெள் (22-6-90) அமாவாசை இரவு 12-25வ மிருகசீரிடம் இரவு 11-18 வரை, சித்தம், அமாவாசை விரதம் அசுபதினம். ராகு 10-24—11-58

ஆனி 9 சனி (23-6-90) பிரதமை இரவு 9-14 வரை, திருவாதிரை இரவு 8-56 வரை, சித்தம், அவசிய கருமங்கள் செய்யலாம் ராகு 8 55—10-29

ஆனி 10 ஞாயி (24 6 90) துவிதியை மாலை 6-29வ புனர்பூசம் மாலை 6-59 வரை, சித்தம், சந்திரதரிசனம், நற்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 4-25—5-59

ஆனி 11 திங் (25-6-90) திரிதியை மாலை 4-18 வ. பூசம் மாலை 5-38 வரை, சித்தம், நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 7-25—8 59

ஆனி 12 செவ் (26-6 90) சதுர்த்தி சித்தம் பகல் 2-50 வரை, ஆயிலியம், மரணம் மாலை 4-58வ. சதுர்த்தி விரதம். நற்கருமங்களை விலக்குக. ராகு 2-55—4-29

ஆனி 13 புத (27-6-90) பஞ்சமி - சித்தம் ப. 2-07வ மகம் - மரணம் மாலை 5-04 வரை, ஷஷ்டிவிரதம் பகல் 2 மணிக்கு முன் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 11-56—1-30

ஆனி 14 வியா (28-6-90) ஷஷ்டி பகல் 2-10 வரை, பூரம் - சித்தம் மாலை 5-56 வரை, இரவு நடேசராபிஷேகம், நற்கருமங்களை விலக்குக. ராகு 1-26—3-00

ஆனி 15 வெள் (29 6-90) ஸப்தமி பகல் 2-59 வ. உத்தரம் மாலை 7-30 வரை, சித்தாமிர்தம், ஆனி உத்தரம் நற்கருமங்களுக்கேற்ற தினம். ராகு 10-26—12-00

ஆனி 16 சனி (30 6 90) அஷ்டமி மாலை 4-56 வ. அத்தம் இரவு 9 42 வரை, மரணம் அசுபதினம் ராகு 8 56—10-30

ஆனி 17 ஞாயி (1-7-90) நவமி இரவு 8-23 வரை, சித்திரை இரவு 12-19 வரை, சித்தம், அசுபதினம் ராகு 4 26—6-00

ஆனி 18 திங் (2 7-90) தசமி இரவு 8-38 வரை, சுவாதி அமிர்தம் பி.இ. 3-28 வரை, நற்கருமங்களுக்கு உகந்ததினம். ராகு 7-26—9-00

ஆனி 19 செவ் (3 7-90) ஏகாதசி இரவு 11-01 வ. விசாகம் முழுவதும், மரணம், ஸர்வஏகாதசி விரதம், ராகு 2-57—4-31

ஆனி 20 புத (4 7-90) துவாதசி பி.இ. 1-21 வரை, விசாகம் காலை 6-10 வரை, சித்தாமிர்தம். நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 11-57—1-31

ஆனி 21 வியா (5 7 90) திரயோதசி பி.இ. 3-30வ அனுஷம் காலை 9-03 வரை, மரணம் பிரதோஷ விரதம் அசுபதினம். ராகு 1-27—3-01

ஆனி 22 வெள் (6-7-90) சதுர்த்தசி பி.இ. 5-23வ கேட்டை - மரணம் பகல் 11-44 வரை அசுபதினம் ராகு 10 27—12-02

ஆனி 23 சனி (7-7-90) பூரணை முழுவதும், மூலம் பகல் 2-06 வரை, சித்தம், பூரணை விரதம் நற்கருமங்களுக்கு உகந்தது. ராகு 8 58—10 32

ஆனி 24 ஞாயி (8-7-90) பூரணை காலை 6-54 வரை, பூராடம் மாலை 4-07 வரை. சித்தாமிர்தம், அசுபதினம்; ராகு 4-28—6-02

ஆனி 25 திங் (9-7-90) பிரதமை காலை 8-02 வரை, உத்தராடம் மரணம் மாலை 5-44 வரை, சுபதினம் அல்ல. ராகு 7-29—9-03

ஆனி 26 செவ் (10-7-90) துவிதியை காலை 8-44 வ. திருவோணம் மாலை 6-57 வரை, சித்தம், வயற் கருமங்கட்கு நன்று. ராகு 2-59—4-33

ஆனி 27 புத (11-7-90) திரிதியை காலை 9-00 வ. அவிட்டம் - மரணம் மாலை 7-43 வரை, அசுப தினம். ராகு 12-00—1-34

ஆனி 28 வியா (12-7-90) சதுர்த்தி காலை 8-48 வ. சதயம் - மரணம் இரவு 8-03 வரை, சுபதினம் அல்ல. ராகு 1-30—3-04

ஆனி 29 வெள் (13-7-90) பஞ்சமி காலை 8-10 வ. பூரட்டாதி மாலை 7-55 வரை, சித்தம், அசுப. தினம். ராகு 10-30—12-04

ஆனி 30 சனி (14-7-90) ஷஷ்டி காலை 7-04 வரை, ஸப்தமி பி.இ. 5-30 வரை, உத்தரட்டாதி-சித்தம் மாலை 7-20 வரை, நற்கருமங்கட்கு உகந்தது. ராகு 9-00—10-34

ஆனி 31 ஞா (15-7-90) அஷ்டமி பி.இ. 3-32 வ. ரேவதி-அமிர்தம் மாலை 6-17 வரை அசுபதினம் ராகு 4-30—6-04

ஆனி 32 திங் (16-7-90) நவமி பி.இ. 1-11 வரை, அசுவினி மாலை 4-54 வரை, சித்தம், அசுபதினம் ராகு 7-30—9-04

இளங்குருத்துக்களை வேலியிட்டு ஆடு, மாடுகள் அழிக்காதவாறு பாதுகாக்க வேண்டும். அவை மரமானபின்பு அவற்றிற்குத் தடைகள் தேவையில்லை. அவைகளே பயன்கொடுக்க ஆரம்பித்துவிடுகின்றன. இதுபோல இளஞ்சிறுவர்களை நேர்மை, ஆண்மை, அடக்கம், சிரத்தை, போன்றவற்றையூட்டி வேலியிட்டு பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்யின் பின்னர் அவர்கள் வளர்ந்து நாட்டிற்கு நற்பலன்களைத் தருவார்கள்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

சோதிடன் சோபிக்கவேண்டுமென்றால் ஜாதகத்தில் வியாழன் பலவானாயிருக்கவேண்டும். அதோடுகூட புதனும், சந்திரனும் பலவானாக விருப்பது அவசியம். அதாவது அவை ஆட்சி உச்சம் பெற்றிருக்கவேண்டும்.

# மிதுன லக்கின ஆணும் கன்னி லக்கினப் பெண்ணும் சேர்வது நன்மையானதா?

— வே. சின்னத்துரை – நல்லூர். —

இந்த இருவருக்கும் நீண்ட உறவு மிகவும் அரிதாகும். சிறுபிள்ளைத்தனமான இந்த மனிதனை கன்னியின் 20 வயதின் பின்னடைவு காலத்தில் தாயாக வசீகரிப்பாள். அவனுடைய திறமை, தொடர்பிற்கு விரிவாக்கம், அழகு எல்லாம் முதிர்ச்சியடையாதன என்று அவள் கருதுவாள். அவனை கணிக்கவேண்டுமென்று நினைப்பாள், அமைதியின்மை அவனுடைய குணாதிசயங்களில் ஒன்று என்று அவள் உணர்வாள். அதன் பின்பு அவனை மாற்றியமைக்க முனைவாள். தன் சீவியத்தில் ஓர் நிறுதிட்ட நோக்கம் வாழ்வில் இருக்க வேண்டுமென்று இவனுக்கு தேவையாயினும் அது எதிர்மாறாக இல்லாதிருக்கவேண்டும். இதை அவன் உணர்ந்தால் இது தனக்குத் தேவையில்லை என்பதை அவன் நிரூபப்படுத்துவான்.

அன்றாட வாழ்வில் விருப்பில் தொந்தரவுகள் ஏற்பட நேரிடும். ஆனால் அவன் குழப்பியடிப்பான். அவனுடைய ஒழுங்கான வாழ்க்கை ஒட்டம் தன்னை மட்டுப்படுத்தும் என நினைப்பான். இது இறுதியில் அவனை ஓடச்செய்யும். வாதுக்கு அவள் வசப்படுவான். சர்ச்சைகள் ஒழுங்குபடுமானால் அவனுக்கு அதில் ஊக்கமிருக்காது. ஆனால் கன்னிப்பெண் தன்னுடைய உறவை பாதுகாப்பாக வைத்துக்கொள்வாள். அவனுடைய விவேகத்துக்கு அவள் மனுச்செய்தால் இருவரும் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும். அவர்கள் இருவருக்கும் பொதுவாகவுள்ளது அளவுக்கு அதிகமான மனம்தான். அதை தினமும் பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டும்.

பாலியலில் அவள்மேல் துரதிஷ்டமான செல்வாக்கை பிரயோகிப்பான். இந்த விடயத்தில் அவள் அவ்வளவு திறமையுள்ளவளல்ல. படுக்கையறைக்கு வெளியிலுள்ள முரண்பாடு அவனுக்கு உடந்தையாக மறுக்கும். தான் சொல்வனவற்றிற்கெல்லாம் உடந்தையாக இருக்கும் ஒருத்தியே அவனது தேவை. புதிய முறைகளையும் தரவல்லவளை அவன் நாடுவான். கொஞ்சக்காலத்தில் வேறு இடத்தில் இதை தேடுவான். இதனால் அவளுக்கு கோபமும் விரக்தியும் உண்டாகும்.

நல்ல உறவல்ல.

## உதயலக்னம் காணும் பதகம் (வாழ்ப்பாணம்)

### பிரமோத ஸ்ரீ ஆனி மீ 1-ந் தேதி முதல் 32-ந் தேதி வரை. (15-6-90 முதல் 16-7-90 வரை)

| இங் ஜூன் | தமி ஆனி | வாரம் | மிதுனம் ம.மி. முதல் (காலை) | மிதுனம் ம.மி. வரை | கடகம் ம. மி. வரை (காலை) | சிங்கம் ம. மி. வரை (பகல்) | கன்னி ம. மி. வரை (பகல்) | துலாம் ம. மி. வரை (பி.ப) | விருச்சி மி. ம. வரை (மாலை) | தனுசு ம. மி. வரை (இரவு) | மகரம் ம. மி. வரை (இரவு) | கும்பம் ம. மி. வரை (இரவு) | மீனம் ம. மி. வரை (பி.இ) | மேடம் ம. மி. வரை (பி.இ) | இடபம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | வெள் | 6 2 | 8 06 | 10 07 | 12 06 | 2 10 | 4 20 | 6 28 | 8 24 | 10 09 | 11 51 | 1 41 | 3 43 | 5 55 |
| 16 | 2 | சனி | 5 55 | 8 02 | 10 03 | 12 02 | 2 06 | 4 16 | 6 24 | 8 20 | 10 05 | 11 47 | 1 37 | 3 39 | 5 51 |
| 17 | 3 | ஞாயி | 5 52 | 7 58 | 9 59 | 11 58 | 2 02 | 4 12 | 6 20 | 8 16 | 10 01 | 11 43 | 1 33 | 3 35 | 5 47 |
| 18 | 4 | திங் | 5 48 | 7 54 | 9 55 | 11 54 | 1 58 | 4 08 | 6 16 | 8 12 | 9 57 | 11 39 | 1 29 | 3 31 | 5 43 |
| 19 | 5 | செவ் | 5 44 | 7 50 | 9 51 | 11 50 | 1 54 | 4 04 | 6 12 | 8 08 | 9 53 | 11 35 | 1 25 | 3 27 | 5 39 |
| 20 | 6 | புதன் | 5 40 | 7 46 | 9 47 | 11 46 | 1 50 | 4 00 | 6 08 | 8 04 | 9 49 | 11 31 | 1 21 | 3 23 | 5 35 |
| 21 | 7 | வியா | 5 36 | 7 42 | 9 43 | 11 42 | 1 46 | 3 56 | 6 04 | 8 00 | 9 45 | 11 27 | 1 17 | 3 19 | 5 31 |
| 22 | 8 | வெள் | 5 32 | 7 38 | 9 39 | 11 38 | 1 42 | 3 52 | 6 00 | 7 56 | 9 41 | 11 23 | 1 13 | 3 15 | 5 27 |
| 23 | 9 | சனி | 5 28 | 7 34 | 9 35 | 11 34 | 1 38 | 3 48 | 5 56 | 7 52 | 9 37 | 11 19 | 1 09 | 3 11 | 5 23 |
| 24 | 10 | ஞாயி | 5 24 | 7 31 | 9 32 | 11 31 | 1 35 | 3 45 | 5 53 | 7 49 | 9 34 | 11 16 | 1 06 | 3 08 | 5 20 |
| 25 | 11 | திங் | 5 21 | 7 27 | 9 28 | 11 27 | 1 31 | 3 41 | 5 49 | 7 45 | 9 30 | 11 12 | 1 02 | 3 04 | 5 16 |
| 26 | 12 | செவ் | 5 17 | 7 23 | 9 24 | 11 23 | 1 27 | 3 37 | 5 45 | 7 41 | 9 26 | 11 08 | 12 58 | 3 00 | 5 12 |
| 27 | 13 | புதன் | 5 13 | 7 19 | 9 20 | 11 19 | 1 23 | 3 33 | 5 41 | 7 37 | 9 22 | 11 04 | 12 54 | 2 56 | 5 08 |
| 28 | 14 | வியா | 5 09 | 7 15 | 9 16 | 11 15 | 1 19 | 3 29 | 5 37 | 7 33 | 9 18 | 11 00 | 12 50 | 2 52 | 5 04 |
| 29 | 15 | வெள் | 5 05 | 7 11 | 9 12 | 11 11 | 1 15 | 3 25 | 5 33 | 7 29 | 9 14 | 10 56 | 12 46 | 2 48 | 5 00 |
| 30 | 16 | சனி | 5 01 | 7 07 | 9 08 | 11 07 | 1 11 | 3 21 | 5 29 | 7 25 | 9 10 | 10 52 | 12 42 | 2 44 | 4 56 |
| ஜூலை 1990 | | | | | | | | | | | | | | | |
| 1 | 17 | ஞாயி | 4 56 | 7 03 | 9 04 | 11 03 | 1 07 | 3 17 | 5 25 | 7 21 | 9 06 | 10 48 | 12 38 | 2 40 | 4 52 |
| 2 | 18 | திங் | 4 53 | 6 59 | 9 00 | 10 59 | 1 03 | 3 13 | 5 21 | 7 17 | 9 02 | 10 44 | 12 34 | 2 36 | 4 48 |
| 3 | 19 | செவ் | 4 49 | 6 56 | 8 57 | 10 56 | 1 00 | 3 10 | 5 18 | 7 14 | 8 59 | 10 41 | 12 30 | 2 32 | 4 44 |
| 4 | 20 | புதன் | 4 45 | 6 52 | 8 53 | 10 52 | 12 56 | 3 06 | 5 14 | 7 10 | 8 55 | 10 37 | 12 26 | 2 28 | 4 40 |
| 5 | 21 | வியா | 4 41 | 6 48 | 8 49 | 10 48 | 12 52 | 3 02 | 5 10 | 7 06 | 8 51 | 10 33 | 12 22 | 2 24 | 4 36 |
| 6 | 22 | வெள் | 4 37 | 6 44 | 8 45 | 10 44 | 12 48 | 2 58 | 5 06 | 7 02 | 8 47 | 10 29 | 12 18 | 2 20 | 4 32 |
| 7 | 23 | சனி | 4 33 | 6 40 | 8 41 | 10 40 | 12 44 | 2 54 | 5 02 | 6 58 | 8 43 | 10 25 | 12 14 | 2 16 | 4 28 |
| 8 | 24 | ஞாயி | 4 29 | 6 36 | 8 37 | 10 36 | 12 40 | 2 50 | 4 58 | 6 54 | 8 39 | 10 21 | 12 10 | 2 12 | 4 24 |
| 9 | 25 | திங் | 4 25 | 6 32 | 8 33 | 10 32 | 12 36 | 2 46 | 4 54 | 6 50 | 8 35 | 10 17 | 12 06 | 2 08 | 4 20 |
| 10 | 26 | செவ் | 4 21 | 6 28 | 8 29 | 10 28 | 12 32 | 2 42 | 4 50 | 6 46 | 8 31 | 10 13 | 12 02 | 2 04 | 4 16 |
| 11 | 27 | புதன் | 4 17 | 6 24 | 8 25 | 10 24 | 12 28 | 2 38 | 4 46 | 6 42 | 8 27 | 10 09 | 11 58 | 2 00 | 4 12 |
| 12 | 28 | வியா | 4 13 | 6 20 | 8 21 | 10 20 | 12 24 | 2 34 | 4 42 | 6 38 | 8 23 | 10 05 | 11 54 | 1 56 | 4 08 |
| 13 | 29 | வெள் | 4 09 | 6 16 | 8 17 | 10 16 | 12 20 | 2 30 | 4 38 | 6 34 | 8 19 | 10 01 | 11 50 | 1 52 | 4 04 |
| 14 | 30 | சனி | 4 05 | 6 12 | 8 13 | 10 12 | 12 16 | 2 26 | 4 34 | 6 30 | 8 15 | 9 57 | 11 46 | 1 48 | 4 00 |
| 15 | 31 | ஞாயி | 4 01 | 6 08 | 8 09 | 10 08 | 12 12 | 2 22 | 4 30 | 6 26 | 8 11 | 9 53 | 11 42 | 1 44 | 3 56 |
| 16 | 32 | திங் | 3 57 | 6 04 | 8 05 | **10 04** | **12 08** | 2 18 | 4 26 | 6 22 | 8 07 | 9 49 | 11 38 | 1 40 | 3 52 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஆனி 32 உ (16-7-90) பகல் 11-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க (10-04—12-08) கன்னிலக்னம்

# ஆனி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| செவ் | சுக் | புத | சூரியன் குரு |
| கும்பம் | ஆனி மாதக் கிரக நிலை | | கேது (கடகம்) |
| மகரம்: சனி ராகு | | | சிங்கம் |
| யுரே நெப் | | | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

5உ (19-6-90) இரவு 10-21 க்கு இட-சுக்
6உ (20-6-90) மாலை 5-11 க்கு தனு-சனி
10உ (24-6-90) பி. இ. 3-25 க்கு மிது-புத
19உ (3-7-90) மாலை 4-21 க்கு மே-செவ்
24உ (8-7-90) பி. இ. 3-03 க்கு கட - புத
30உ (14-7-90) பி. இ, 3-50க்கு மிது - சுக்
7உ புதன் அஸ்தமனம்
19உ குரு அஸ்தமனம்
சனி, யுரேனஸ், நெப்டியூன் இம்மாதம் வக்ரத்திலேயே சஞ்சரிக்கின்றன.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆனி | 2உ | (16-6-90) | காலை | 8-24 | முதல் | மீனம் |
| | 4உ | (18-6-90) | பகல் | 11-49 | ,, | மேடம் |
| | 6உ | (20-6-90) | பகல் | 12-42 | ,, | இடபம் |
| | 8உ | (22-6-90) | பகல் | 12-36 | ,, | மிதுனம் |
| | 10உ | (24-6-90) | பகல் | 1-25 | ,, | கடகம் |
| | 12உ | (26-6-90) | பகல் | 4-58 | ,, | சிங்கம் |
| | 14உ | (28-6-90) | பி. இ. | 12-15 | ,, | கன்னி |
| | 17உ | (1-7-90) | பகல் | 10-57 | ,, | துலாம் |
| | 19உ | (3-7-90) | இரவு | 11-25 | ,, | விருச்சிகம் |
| | 22உ | (6-7-90) | பகல் | 11-43 | ,, | தனுசு |
| | 24உ | (8-7-90) | இரவு | 10-33 | ,, | மகரம் |
| | 27உ | (11-7-90) | காலை | 7-23 | ,, | கும்பம் |
| | 29உ | (13-7-90) | பகல் | 1-59 | ,, | மீனம் |
| | 31உ | (15-7-90) | மாலை | 6 13 | ,, | மேடம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆனி 32 உ பகல் 11-30 மணிக்கு கன்னி லக்னம் என அறிந்து கொண்ட பின் 'கன்னி' என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

இம்மாதபலன்

மாதம் பிறக்கும்போது கடகலக்னம் உதயமாகின்றது. லக்கினாதிபதி சந்திரன் அட்டமத்தில் இருக்கின்றது. சூரியன், குரு என்பன 12-ம் வீட்டில் மறைகின்றன. லக்கினத்தைச் சனி திருஷ்டிக்கின்றது. எனவே முன்னேற்றமான பலன்கள் எதையும் எதிர்பார்க்கக்கூடியதாக இல்லை. செவ்வாயைச் சனி திருஷ்டிப்பதால் திடீர் வன்செயல் சம்பவங்கள் ஏற்படக்கூடும்.

# ஆனி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

15-06-90 – 16-07-90

சூரியன்:– 15-6-90 காலை 7-22 மிதுனராசிப் பிரவேசம்
15-6-90 உதயம் காலை 5-53
15-6-90 உச்சம் பகல் 12-10
15-6-90 அஸ்தம் மாலை 6-27
29-6-90 உதயம் காலை 5-50
29-6-90 உச்சம் பகல் 12-13
29-6-90 அஸ்தம் மாலை 6-29

சந்திரன்:- 22-6-90 அமாவாசை பி. இ. 12-25
24-6-90 சந்திரதரிசனம்
8-7-90 பூரணை காலை 6-54

## கிரகங்கள்

புதன்:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கீழ்வானில் 20 பாகை உயரத்தில் காணப் படும் இக்கிரகம் 21-6-90-ல் அஸ்தமனமடைந்து 15-6-90-ல் மேற்கில் உதயமாகும். மாதமுடிவில் மேற்குவானில் 15 பாகை உயரத்திற் காணப் படும். 24-6-90-ல் மிதுனராசியிலும், 8-7-90-ல் கடகராசியிலும் பிரவேசிக்கின்றது.

சுக்கிரன்:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கீழ்வானில் 36 பாகை உயரத்தில் தோன் றும். இக்கிரகம் மாதமுடிவில் 28 பாகை உயரத் திற் காணப்படும். 19-6-90-ல் இடபராசியிலும் 14-7-90-ல் மிதுனராசியிலும் பிரவேசிக்கின்றது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கீழ் வானில் 73 பாகை உயரத்தில் தோற் றும் இக்கிரகம் மாதமுடிவில் 80° உயரத்தில் (உச் சிக்கு 10 பாகை கிழக்கில்) காணப்படும். 3-7-90ல் மேடராசியிற் பிரவேசிக்கின்றது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்த மனத்தின் பின் மேற்குவானத்தில் 23 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் 3-7-90-ல் மேற் கில் அஸ்தமனமடையும். மிதுனராசியிலேயே இம் மாதம் சஞ்சரிக்கின்றது.

சனி:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் மேற்குவானில் 31 பாகை உயரத்தில் காணப் படும் இக்கிரகம் மாதமுடிவில் சூரிய உதயத்தின் போது மேற்கு அடிவானத்தில் காணப்படும். வக்கிரகதியில் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் 20-6-90ல் தனுராசியிற் பிரவேசிக்கின்றது.

யுரேனஸ்:- தனுராசியில் வக்கிரகதியிற் சஞ் சரிக்கின்றது.

நெப்டியூன்:- தனுராசியில் வக்கிரகதியிற் சஞ் சரிக்கின்றது.

புளுட்டோ:- துலாராசியில் சஞ்சரிக்கின்றது.

## சமாகமங்கள்

17-6-90 மாலை 4-30 மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 7 பாகை சந்திரோதயத்தின் பின் பார்க்கவும்.

20-6-90 நண்பகல் சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 7 பாகை. அன்று உதயம் முன் அவ தானிக்கவும்.

23-6-90 இரவு 9 மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு குரு 1½ பாகை. மறுநாள் சந்திர தரி சனத்துடன் அவதானிக்கவும்.


8-7-90 பிற்பகல் சந்திரனுக்கு வடக்கு சனி 1½ பாகை சந்திர உதயத்தின் பின் பார்க்கவும்

16-7-90 முற்பகல் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 8 பாகை உதயம் முன் அவதானிக்க.

## "பிரமோத" என்பது சரியா?

அறுபது வருடங்கள் பற்றிய சுலோகத்தில் பிரபவ, விபவ, சுக்ல, பிரமோத, பிரஜாபதி என்றே காணப்படுகின்றது. மென்மேலும் அபி விருத்தியடையவும், ஐசுவரியத்தைப் பெறவும், உற்பத்தி பொருட்கள் வளரவும், சகல சௌ பாக்கியங்களையும் பெறவும் உரியது என்பது அவ்வாக்கியத்தின் கருத்தாகும். எனவே "பிர மோத" என்பதே சரியானது. காலப்போக்கில் அது பிரமோதூத என்று வழக்கில் வந்துவிட் டது. அது சரி அல்ல.


— ஞானபூமி, மே-1990




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 15-06-90 முதல் 16-07-90 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக் கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமேகிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதைமனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1, 2-ம் கால்

மேடராசியில் செனனமானவர்களுக்குச் சூரிய பகவான் 3இல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருவது நன்மை தரும், கடந்தகாலங்களிலும் பார்க்க இந்த மாதத்தில் மனநிறைவுகள் கிடைக்கும். தேகசுகம், குடும்பசுகம் என்பவற்றிலும் முன்னேற்றம் ஏற்படும். பொருள் வருமானமும் அதிகரிக்கும். இராசாங்க அதிகாரிகளின் உதவிகள் காரியசித்திகள், பெரியோர் உதவிகள் விற்றல் வாங்கல் சம்பந்தமான லாபங்கள் பிதிர்வழிச் சிறப்புகள் சகோதரர் வழியில் செலவுகள் புத்திரர் கவலை இனசன பந்துக்கள் தொல்லை முதலானவை நிகழும். வியாழ பகவான் இந்த மாதமும் குரோசார சஞ்சாரம் செய்வதால் பெரியோர் பகை விரோதங்கள் முதலானவையும் இடம்பெறவும் கூடும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும்; குடும்ப சுகமும் சீராக இருக்கும். புத்திரர் உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்காவிட்டாலும் வீட்டில் மனநிறைவும் உண்டாகும். பிதா வழியில் சுப சந்தோஷ நிகழ்ச்சிகளும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் வியாபார முன்னேற்றம் பெறும். முதலீடுகளில் வருமானம் வரத் தொடங்கும். அழகுசாதனங்கள் ஆடை ஆபரணங்கள் வியாபாரிகள் அதிக லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் இருவகைப் பெலமும் பெறுவதால் பதவிச் சிறப்புகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுகளுடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் பெறுவர்.


விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிரழிவுகள் ஏற்பட்டாலும் விளைச்சல் கணிசமாக அதிகரிப்பதால் நட்டம் வராது. விவசாயப்பண்ணைகளிலும் விளைவு பொருள்களுக்கு நல்ல சந்தைவாய்ப்பு கிடைக்கும்.

தொழிலாளர்களுக்கு இந்த மாதம் வேலை வசதிகள் ஓரளவு கிடைக்கும். தொழிலாளர் வேலைசெல்லுவோர் மத்தியில் நல்லெண்ணமும் வளரும். இவர்களின் தினசரி வாழ்க்கையிலும் வசதிகள் கூடும். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். இவ்வளவு காலமும் இடம்பெற்றுவந்த கல்வித்தடைக்காரணிகள் விலகத் தொடங்கும். நம்பிக்கையும் சுய முயற்சியும் தோன்றும். பரீட்சைகளிலும் சித்தி பெறுவர்.

பெண்களுக்கு இந்த மாதத்தில் எண்ணங்கள் பெரும்பாலும் கைகூடிவரும். இவ்வளவு காலமும் இழுபறியாக இருந்த விவாகப் பிரச்சினைகளிலும் நல்ல திருப்பம் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கு மனநிறைவும் ஏற்படும்:

அதிஷ்டநாள்: ஜூன் 15, 19, 23, 27, 28
ஜூலை 7, 8, 12, 16
துரதிஷ்டநாள்: ஜூன் 17, 29, 30
ஜூலை 4, 5, 14




கார்த்திகை 2 3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 2ல் தாம்ர மூர்த்தியாகச் சஞ்சாரம் செய்கிறார். இவர் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்தாலும் வியாழபகவானின் சுபகோசார சஞ்சாரமும் இருப்பதால் பெரும்பாலும் நன்மை தீமை கலந்த பலன்களே இந்தமாதமும் நிகழும்: தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். இனசனபந்துக்கள் புத்திரர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். எந்தமுயற்சியிலும் தடை, தாமதம், அலைச்சல், வீண் செலவுகளும் ஏற்படும். இராசாங்க அதிகாரிகளின் துன்பங்களும் சிலருக்கு ஏற்படும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் கடன் பயமும் உண்டாகும். வீட்டில் சுப மங்களகாரிய சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்கு வருமானம் திருப்தி தரும். புத்திரர், உறவினர்களின் உதவிகள் ஒத்தாசைகள் குடும்பத்தில் சிறப்பைத் தரும், குடும்ப சுகம் சீராக இருக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையடையும். வாடிக்கையாளரின் வருகை குன்றும். கடன் பிரச்சனைகள் ஏற்படும்: ஆனால் பழைய முதலீடுகளின் வருமானம் கூடும். நிதிவசதி குறைவுறாது.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம் குறைவதால் வேலைப்பொறுப்புக்கள் அதிகரிப்பதுடன் மேலதிகாரிகளின் கோபத்துக்கும் உள்ளாக வேண்டி இருக்கும். பதவி உயர்ச்சி முதலியன கேள்விக்குறியே.


விவசாயிகளுக்கு இந்தமாதமும் விளைச்சல் கூடும். ஆனால் பயிர் அழிவுகளால் உற்பத்திச் செலவுகளும் கூடும். எதிர்பார்த்த லாபம் பெறுவது கடினம்: பொதுவாக இவர்களுக்கு லாபம் குன்றினாலும் நட்டம்வர இடமில்லை.

தொழிலாளர்களுக்கு ஓரளவு வேலைவசதிகள் அதிகரிக்கும். தொழிற்பிணக்குகளும் பெரும்பாலும் நீங்கும். இவர்களின் நாளாந்த சீவனத்துக்கும் போதிய வருமானம் கிடைக்கும்.

மாணவர் கல்வி வளர்ச்சிபெறும். ஆசிரியர், மாணவர் ஒத்துழைப்பும் சிறக்கும். கணிதத்துறை, கலைத்துறை மாணவர் சிறப்புச் சித்திகள் புலமைப் பரிசில்கள்கூடப் பெறுவர்.

பெண்களுக்கு எதிர்ப்புக்கள் இருந்தாலும் காரிய வெற்றி கிட்டும்: விவாகமாகாதவர்களுக்கு விவாகசித்தியும் கைகூடும். வீட்டில் மங்கள சம்பவங்கள் நிகழுவதால் குடும்பப் பெண்கள் மனநிறைவு பெறுவர்.

அதிஷ்ட நாள்: ஜூன் 17, 21, 25, 29, 30
ஜூலை 9, 10, 14
துரதிஷ்டநாள்: ஜூன் 19,20 ஜூலை 2,3,7,8,16




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2.3

மிதுன ராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 1ல் (சென்மத்தில்) ரஜஸ மூர்த்தியாக வலம் வருவதால் நன்மை, தீமைகள் கலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். இவர்களின் தேகசுகம் இடைக்கிடை கெடும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் பகைவிரோதங்களும் ஏற்படும். அலைச்சல்மூலம் காரியசித்தியும் பெறுவர்: அட்டமத்

துச்சனியும் சென்மவியாழனுமாகிய கோசாரசஞ்சாரம் நிகழுவதால் ஏமாற்றம், சோரசத்துரு பயம், தேசப்பிரஸ்டம் நீசர்தொல்லை வீடுவாகன பீடைகள், விபத்து, அவமிருத்துப் பயம் முதலியனவும் சிலருக்கு நிகழும்.

குடும்பத்தில் சச்சரவுகள், பிணி, பீடைகள் இடைக்கிடையே தோன்றி மறையும். வீட்டில் எதிர்பாராத திடீர் நெருக்கடிகளும் வீண்செலவுகளும் அதிகரிக்கும். கடன்பயமும் உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதம் வியாபாரம் மந்த நிலை அடையும். முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும். பழைய நிலுவைக் கடன்களால் வீண் செலவுகளும் தொல்லைகளும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் மூர்த்தி பலம் பெற்றாலும் தானபெலம் பெறுமையால் வேலைப்பொறுப்புகள் கூடும். மேலதிகாரிகளின் பாரட்டுக்களும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவுகள் கூடிக்கொண்டே போகும். விளைச்சலும் குன்றும். குத்தகை விவசாயிகள் முதலீ கள் செய்வதில் நிதானமும் முன் எச்சரிக்கையும் தேவை.


தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் பெரும் பாலும் கிடையாது. நாளாந்த சீவனத்துக்கே வருமானம் கிடைப்பது சந்தேகமே. தொழில் பிணக்குகளும் கஷ்டம் ஏற்படுத்தும்.

மாணவர் மத்தியில் ஏமாற்றமும் விரக்தியும் ஏற்படுவதலால் கல்வி முன்னேற்றம் பெரிதும் தடைப்படும். பரீட்சைகளில் சித்தி இவர்களின் சுயமுயற்சிகளிலேயே உள்ளது.

பெண்களுக்கு எடுத்த முயற்சிகள் எல்லாம் தடையும் தாமதங்களும் ஏற்படும். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகளும் இழுபறி நிலையில் தொடரும்.

அதிஷ்டநாள்: ஜூன் 15, 19, 23, 27, 28
ஜூலை 2, 3, 12, 16

துரதிஷ்டநாள்: ஜூன் 21. ஜூலை 4, 5, 9, 10



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம் கடகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 12ல் லோகமூர்த்தியாக வலம் வருவதால் சுபபலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. பொதுவாக இவர்களுக்குத் தேகசுகம் என்பன அடிக்கடி பாதிப்படையும். பொருள் வருமானமும் குன்றும். எந்த முயற்சிகளில் ஈடுபட்டாலும் தடை, தாமதம், ஏமாற்றம், அலைச்சல் வீண் செலவுகள் எல்லாம் ஏற்படும். இனசனப் பகை, புத்திரர் கஷ்டம் பிதிர்வழிச்செலவுகள் கூட உண்டாகும். சிலருக்கு அந்நியர்தொல்லை அந்நிய தேச சஞ்சாரம், எதிர்பாராத திடீர் நெருக்கடிகள்கூட உண்டாகும். வீட்டில் அல்லது குடும்பத்தில் மங்கள காரியங்கள் நிகழுவதும் கஷ்டமே. தெய்வ பக்தியுடன் நவக்கிரக வழிபாடுகள் செய்து வருவதால் கஷ்டசாந்தியடைவார்கள்.

குடும்பத்தவர்களுக்கு வீண்செலவுகள் ஏற்படும். குடும்பசுகவீனங்கள் குடும்ப அமைதியைக் குறைக்கும். புத்திரர் உறவினர்களின் உதவி ஒத்தாசைகள் கிடையாது. கடன்பயமுமுண்டாகும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபாரமும் சிறப்பாக நடக்கும். ஆனால் முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும். கடன் நிலுவைகளைக் குறைப்பதும் முதலீடுகளைத் தவிர்த்தலும் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கூட ஏற்படும். பதவிக்குச் சம்பந்தப்படாத வேலைகளைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படலாம்.

விவசாயிகளுக்குச் சனிபகவான் பலன் பெறுவதால் பயிர்விளைச்சல் அதிகரிக்கும். உற்பத்திச் செலவுகளும் அதிகரிப்பதால் எதிர்பார்த்த லாபம் கிடையாது; பண்ணையிலும் நட்டம் வராது.

தொழிலாளர்களுக்குச் சாதாரணமாக வேலை வசதிகள் கிடைக்கும். ஆனல் (வேலைக்கேற்ற சம்பளம்) கிடைக்குமா என்பதுதான் கேள்வி? வாழ்க்கைக்கு கஷ்டம் வராது.

மாணவர் கல்விக்குழப்பநிலை நீடிக்கும். ஆசிரியர் மாணவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் வளரும். மாணவர்கள் முயற்சிகளுக்குக்கூட ஏமாற்றங்கள் உண்டாகும்.

பெண்களுக்குப் பலப்பல பிரச்சனைகள் அவ்வப்போது தோன்றிவரும். கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகளில் தோல்வி ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. குடும்பப் பொறுமைக்கும் சோதனையான காலம்.

அதிஷ்ட நாள்: ஜூன் 17, 21, 25, 29. 30
ஜூலை 4, 5, 14

துரதிஷ்டநாள் ஜூன் 15,23. ஜூலை 7,8,12



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 11ல் திரிமூர்த்தியாக வலம்வருவதால் நன்மை தீமை கலந்த பலன்களே பெரும்பாலும் நிகழும். இவர்களின் உடல்நலம் குடும்ப நலம் என்பன சீராகவே இருக்கும். பொருள்வருமானமும் கூடும். நண்பர்கள், உறவினர்கள், பெரியவர்கள் முதலியோரின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். சிலருக்கு அந்நியருதவி, அந்நியதேச பொருள்வரவு, மேற்கு தென்மேற்குத் திக்கில் அனுகூலம். அலைச்சல் மூலம் காரியசித்தி, அந்நிய தேசப் பிரயாணம், பிதிர்வழிச் செலவுகள், உத்தியோகத்தில் மனக்கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை முதலியனவும் உண்டாகும். குரு, சனி இராகு இவர்களின் சுபகோசார சஞ்சாரம் நிகழுவதும் நன்மையாகும்.

குடும்பத்தில் பெரும்பாலும் நல்லுறவு வளரும். உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். வீட்டில் விவாகாதி மங்கள கொண்டாட்டங்கள் நிகழலாம். தவிர்க்கமுடியாத வீண்செலவுகளால் நிதி நெருக்கடியும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம்பெறுவதால் முன்னேற்றமுண்டாகும். பழைய முதலீடுகளில் வருமானம் வரத்தொடங்கும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். புது முதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்கட்குச் சூரியன் தான பெலம் பெற்றாலும் மூர்த்திபலம் குன்றுவதால் மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடன் ஊழியர்களின் ஒத்துழைப்பால் எதையும் சமாளித்துவிடுவார்கள்.

விவசாயிகட்கு பயிர்விளைச்சல் அதிகமாகும். அரசமானியம், பசளை, மருந்து உரியகாலத்தில் கிடைக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளிகட்கு வேலைவசதிகள் போதிய வருவாயைத் தரும். நாளாந்த சம்பளம்பெறும் தொழிலாளிகூட தேவைக்குமேல் வருமானம்பெறுவான். இயந்திரப்பொறி வல்லுனர் கூடியவருமானம் பெறுவர்.

மாணவர் கல்விவிளர்ச்சி தொடரும். ஆசிரியர்கள்-மாணவர் நல்லுறவு வளரும். கணித விஞ்ஞானத்துறை மாணவர்கள் சிறப்புச்சித்திகள், புலமைப் பரிசில்கள்பெற சாதகமான காலம்.

பெண்களுக்கு நினைவுகள் நிறைவுபடக்கூடிய மாதம். கன்னிப்பெண்களின் விவாகவிஷயங்கள் சாதகமாகக் கைகூடும். குடும்பத்தில் நிகழும் மங்கள காரியங்கள் குடும்பப்பெண்களை மகிழ்விக்கும்.

அதிஷ்ட நாள்: ஜூன் 19,23,27,28.
ஜூலை 2,3,7,8,16.

துரதிஷ்டநாள்: ஜூன் 17,25. ஜூலை 10, 14.



## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2

கன்னிராசியில் ஜனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 10ல் சுவர்ணமூர்த்தியாகப் பலத்துடன் வலம்வருவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் தேகநலம் குடும்பநலம் என்பன வற்றில் முன்னேற்றம் உண்டாகும். இராசாங்க அனுகூலங்கள், காரியசித்திகள், தொழில் விருத்திகள், பிதிர்வழி உறவினர் உதவிகள், விற்றல் வாங்கல் மூலம் லாபங்கள் முதலான சுபபலன்கள் அதிகம் நிகழும். ஆனால் வியாழன், சனி, இராகு இவர்களின் துர்க்கோசார சஞ்சாரமும் நிகழுவதால் அலைச்சல், இடப்பிரிவு, பொருள் நட்டம், புத்திரர் கஷ்டம், சோரசத்துரு பயம், அந்நியர் தொல்லை அந்நியதேச சஞ்சாரம் முதலியனவும் கலந்து நிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு உண்டாகும். குடும்ப வருமானம் கணிசமாக அதிகரிக்கும். தவிர்க்கமுடியாத செலவுகளால் வருமானம் போதாது நெருக்கடிகளும் உண்டாகும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். மொத்த சில்லறை வியாபாரிகள் எல்லோரும் நல்லலாபம் பெறுவர். ஆனால் கடன் நிலுவைகளால் வீண் செலவுகளும் உண்டாகும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் நல்லெண்ணங்களையும் சிலர் பதவியுயர்ச்சி முதலான சிறப்புக்களையும் பெறுவர். வசதியான இடமாற்றம் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இம்மாதம் பயிரழிவுகள் தொடருவதால் உற்பத்திச்செலவுகள் கூடும். ஓரளவு விளைச்சல் கூடுதலாலும், உடனுக்குடன் நல்ல சந்தை வாய்ப்பாலும் நட்டமேற்படாது.

தொழிலாளருக்கு தொழிற்பிணக்குகள் அடிக்கடி உண்டாகும். தினச்சம்பளம் பெறுவோருக்கு வேலைவசதிகள் குறைவதால் நாளாந்த சீவியத்துக்கே கஷ்டமேற்படும்.

மாணவர் கல்வியில் முன்னேற்றச் சூழலாரம்பிக்கும். ஆசிரியர்-மாணவர் மத்தியில் நல்லிணக்கமுண்டாகும். சுயமுயற்சியால் பரீட்சைகளில் சித்தியும் பெறுவர். கணித - விஞ்ஞானத்துறை மாணவர்களுக்குச் சாதகமான காலம்.

பெண்களுக்குப் பொறுமைக்குச் சோதனையானகாலம். இவர்கள் ஈடுபடும் காரியங்களெல்லாம் சிரமங்களும் சிக்கல்களுமேற்படும். விவாகப் பிரச்சினைகளும் இழுபறிநிலையில் அல்லது தோல்வியில் முடியும்.

அதிஷ்ட நாள்: ஜூன் 21,25,29,30.
ஜூலை: 1,4,5,9,10.
துரதிஷ்டநாள்: ஜூன்: 15,19,27,28.
ஜூலை 12,16.




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2 3

துலாம் இராசிக்காரருக்கு இம்மாதம் சூரிய பகவான் 9ல் ரஜகமூர்த்தியாக வலம்வருவதால் நன்மை தீமை கலந்த பலன்கள் நிகழும். சூரியன் வியாழபகவானுடன் சேர்ந்து சஞ்சாரம் செய்வதாலும் வியாழபகவானின் சுபகோசார சஞ்சாரமும் திருஷ்டியும் இருப்பதாலும் சுபபலன்களே அதிகம் நிகழவேண்டும். தேகசுகம் குடும்பசுகம் என்பனவற்றில் முன்னேற்றம் உண்டாகும். பெரியோருதவி புத்திரர் உறவினர்களினுதவி, காரிய சித்திகள், வீட்டில் நிகழும் மங்களகாரியங்கள், அந்நியர் உதவிகள் முதலான சுபபலன்கள் அதிகம் உண்டாகும். பொருள்வருமானத்தில் செலவுகளும், பிணிபீடைகளும் அலைச்சலும் சிலருக்குக் கலந்துநிகழும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். புத்திரர் முதலானவர்களுக்குள் விவாகாதி மங்களச் சிறப்புக்கள்கூட இடம்பெறும். பெரியோர், உறவினர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் பார்வைக்கு விறுவிறுப்பாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைப்பது கடினம். முதலீடுகளிலும் வருமானம் வீழ்ச்சியுறும். அவதானமும் முன்னெச்சரிக்கையுமுடையவர்கள் லாபம்பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் பெறுவதால் மேலதிகாரிகளின் நல்லெண்ணம் வளரும். பதவியுயர்ச்சி முதலியனவும் பெறுவர். உடன் உத்தியோகத்தர்களின் உதவியொத்தாசைகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இம்மாதமும் பயிர்விளைச்சல் கணிசமாக அதிகரிக்கும். நல்ல சந்தைவாய்ப்பும் லாபமும் பெறுவர். விவசாயப் பண்ணைகளிலும் லாபமுண்டாகும். வாழ்க்கைத்தரமும் உயரும்.

தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் உண்டாகும். தொழிற்பிணக்குகள் பெரும்பாலும் நீங்கும். வேலைவசதிகள் கூடுவதுடன் வருமானமும் அதிகரிக்கும். இயந்திரத் தொழிலாளர் கூடிய வருமானம் பெறுவர்.

மாணவர் கல்விமுன்னேற்றம் மகிழ்ச்சிதரும். கணித-விஞ்ஞான-சட்டத்துறை மாணவர்கள் புலமைப்பரிசில்கள் கூடப்பெறுவர். பொதுவாக சுயமுயற்சிகளைப் பொறுத்து சிறப்புப் பெறமுடியும்.

பெண்களுக்குப் பெரும்பாலும் காரியசித்திகள் உண்டாகும். விவாகாதி முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டாகும். குடும்பப்பெண்கள் மனநிறைவும் பெறுவர். உத்தியோகப் பெண்களுக்கும் பதவியுயர்ச்சி முதலியன கிடைக்கும்.

அதிஷ்ட நாள்: ஜூன் 15,23,27,28.
ஜூலை 2,3,7,8,12.
துரதிஷ்டநாள்: ஜூன் 17,21,29,30.
ஜூலை 14,15.




விசாகம் 4, அனுஷம், கேட்டை

இவ்விராசிக்காரருக்கு இம்மாதம் சூரியபகவான் அட்டமத்தில் லோகமூர்த்தியாக வலம் வருவதால் சுபபலன்களை எதிர்பார்க்க முடியாது. தேகசுகம் இடைக்கிடை பாதிப்படையும். குடும்ப

சுகம் சீராக இருக்கும். பொருள் வருமானத்தி லும் செலவுகள் அதிகரிக்கும். காரியத்தடை, ஏமாற்றம், அலைச்சல், இராசாங்க அதிகாரிகளால் துன்பம், புத்திரர் கஷ்டம், இனசன பகைவிரோ தங்கள், துக்கசம்பவங்கள் முதலியன நிகழவேண் டும், சனிபகவான், ராகு, செவ்வாய் இவர்களின் சுபகோசாரசஞ்சாரம் நிகழுதலால் அந்நியருதவி, அந்நியதேசப் பொருள்வரவு, மேற்கு தெற்குத் திக்கில் அனுகூலம், வாகனவசதிகள் முதலியன கிடைக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு வளரும். ஆனால் எதிர் பாராத திடீர்நெருக்கடிகளும் செலவுகளும் குடும் பத்தில் அமைதிக்குறைவை உண்டாக்கும்; புத் திரர் உதவிகள் கிடைப்பது கடினம். இனசன பகை விரோதங்களும் உண்டாகும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம்பெறுவதால் வியாபாரம் இந்த மாதமும் சிறப்பாக நடக்கும். இயந்திரவகை எண்ணெவகை வியாபாரிகள் அதிக லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் அடிக்கடி கருத்துமோதல்கள் ஏற்படும். வீண் செலவுகளும் அதிகரிக்கும். சிலர் கஷ்டப்பிரதேச இடமாற்றம் பெற்றாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு இம்மாதமும் பயிர்ச்செழிப் பும் விளைச்சலுமதிகரிக்கும். கூலியாட்களின் ஒத் துழைப்பும் நல்ல சந்தைவாய்ப்பும் கிட்டும்; விவ சாயப்பண்ணைகளிலும் லாபம் கிட்டும்.

தொழிலாளருக்கு வருமானம் கூடும். பொது வாக தொழிற்பிணக்குகள் குறைந்துவிடும். வாழ்க்கை வசதிகளும் ஓரளவு முன்னேற்றம் காணும். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்விமுன்னேற்றம் சாதாரண வேகத்துடன் தொடரும். கருத்துமோதல்கள் ஏற் படும். எவ்வாறாயினும் இவர்களின் கல்வி ஊக்க மும் சுயமுயற்சியும் பரீட்சையில் சித்திதரும்.

பெண்களின் காரியங்களில் பிறரின் அநாவ சிய தலையீடுகள் உண்டாகும். விவாகாதி பிரச் சினைகளிலும் இழுபறிநிலை ஏற்படும். குடும்பத்தில் பல பிரச்சினைகள் தோன்றிமறையும்.

அதிஷ்ட நாள்: ஜூன் 17, 25, 29, 30.
ஜூலை 4, 5, 9, 10, 14.
துரதிஷ்டநாள்: ஜூன் 19, 23. ஜூலை 2, 3, 16.



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 7ல் தாம்ரமூர்த்தியாக குருபகவா னுடன் சேர்ந்து வலம்வருவதால் நன்மை தீமை கலந்த பலன்கள் நிகழும். இவர்களின் தேகசுகம் குடும்பசுகம் என்பனவற்றில் முன்னேற்றம் உண் டாகும். குறிப்பிடக்கூடியதாக பொருள் வருமா னமும் கூடும். நண்பர்கள் உறவினர்களின் உதவி களும் கிடைக்கும். தடைகள் தாண்டிக் காரிய சித்தியும் பெறுவர். இராசாங்க அதிகாரிகளின் தொல்லைகளும் இடைக்கிடை உண்டாகும். வீட் டில் அல்லது குடும்பத்தில் மங்கள காரியங்கள் திடீர் செலவுகள் முதலியவற்றால் செலவுகளும் அதிகரிக்கும். ஏழரைச்சனியின் காலமும் தொட ருவதால் அந்நியதேச சஞ்சாரம் அலைச்சல் முத லியன இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை.

குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் பிணிபீடை கள் இடைக்கிடை தோன்றிமறையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடிக்கொண்டே போகும். புத்திரர் உறவினர்களின் உதவி ஒத் தாசைகளும் ஓரளவு ஆறுதல் தரும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதமும் குறிப்பிடக் கூடிய வியாபார முன்னேற்றமுண்டாகும். ஆனால் கடன் நிலுவைகளால் வீண்செலவும் பிரச்சனை களும் உண்டாகும். லாபமும் குன்றும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் பலம் குன் றினாலும் குருவுடன் சேர்ந்து இருப்பதால் அதிக தொல்லைகள் ஏற்படமாட்டாது. வேலைநெருக்கடி கள் அதிகரிக்கும். பயவியுயர்ச்சி பின்தள்ளப்படும்;

விவசாயிகளுக்கு பயிருற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். பசளை, மானியம், மருந்து முதலான உதவிகளும் கிடைப்பதால் விளைச்சல் ஓரளவு கூடும். லாபமில்லாவிட்டாலும் நட்டம் வராது.

தொழிலாளர் வேலைவாய்ப்புக்களைப் பெற்றா லும் தொழில் பிணக்குகளால் போதிய வருமா னம் பெறுவது கடினம். நாளாந்த சீவியத்துக்கும் கஷ்டம் ஏற்படும். ஒப்பந்தத் தொழில்களிலும் எதிர்பார்த்த லாபம் கிடையாது.

மாணவர் கல்வியூக்கம் பெறுவர். ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் முன்னேற்றப்பாதைக்கு வழிவகுக்கும். சட்டத்துறை மாணவர் சிறப்புச் சித்திகள் பெறுவர்.

பெண்களுக்கு பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றினும் காரியசித்தி பெறுவார்கள். சிலருக்கு விவாகப் பேச்சுக்களில் முன்னேற்றமும், விவாகசித்தியும் கைகூடும்.

அதிஷ்டநாள்: ஜூன் 15,19,27,28.
ஜூலை 2,3,7,8,12,16.

துரதிஷ்டநாள்: ஜூன் 21,25,26. ஜூலை 4,5,6.




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 6ல் ரஜதமூர்த்தியாகப் பலம்பெறுவது நன்மைதரும். கடந்த மாதங்களிலும் பார்க்க இம்மாதத்தில் தேகசுகம் குடும்பசுகம் என்பன வற்றில் முன்னேற்றமுண்டாகும். பொருள்வருமானமும் கூடும். அசைசல் மூலம் காரியசித்தியும் உண்டாகும். சனிபகவான் தொடக்கம் பெரும்பாலான கிரகங்களின் கோசார சஞ்சாரம் பாதகமாக அமைவதால் பொருள்நட்டம், வீண்செலவுகள், பகை விரோதங்கள், சோரசத்துருபயம் முதலியன நிகழ்ந்தாலும் ஆச்சரியமில்லை. தசாபுத்தி அந்தரபலமுள்ளவர்கள் ஓரளவு ஆறுதல் பெறுவர். மற்றவர்கள் தெய்வபக்தி வழிபாடுகளால் சாந்திபெற முடியும்.

குடும்பத்தில் பிணிபீடைகள் அடிக்கடி தோன்றிமறையும். கணவன் மனைவி கருத்துவேறுபாடுகளும் வளரும். சிலர் பிரிந்து வாழ்ந்தாலும் ஆச்சரியமில்லை. குடும்பச்செலவுகள் கூடும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளின் வருமானம் குறையும். வாடிக்கையாளரின்வரவும் வீழ்ச்சியுறும். நிதிநெருக்கடிகளும் ஏற்படும். கள்ளச்சந்தை வியாபாரிகள் நட்டமடைவர். ஊழியர்கள் கூடத் துரோகிகளாகிவிடுவர்.

உத்தியோகத்தர்கட்கு வேலைப்பொறுப்புக்கள் கூடினாலும் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் சக உத்தியோகத்தருடன் கருத்துவேறுபாடுகளும் உண்டாகும்.

விவசாயிகளுக்கு, இந்தமாதமும் பயிரழிவு தொடரும். பயிருற்பத்திச் செலவுகளும் அதிகரிக்கும். குத்தகை விவசாயிகள் கூடியவரை முதலீடுகளைக் குறைப்பதும் நன்மைதரும்.

தொழிலாளர் மத்தியில் இந்தமாதமும் அமைதிக்குறைவே தொடரும். வருமானக்குறைவால் இவர்களின் தினசரி வாழ்க்கையும் கஷ்டம்தரும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை நீடிக்கும். ஆசிரியர், மாணவர் கருத்துவேறுபாடும் கல்விவளர்ச்சிக்குத் தடையாக அமையும். கல்வித் தேர்ச்சியிலும் முன்னேற்றம் உண்டாவது கடினமே!

பெண்களுக்கு இந்தமாதத்தில் ஏமாற்றங்கள் காத்து நிற்கும். கன்னிப்பெண்களின் விவாகப் பிரச்சினைகளும் இழுபறிநிலையில் தொடரும் அல்லது ஏமாற்றம் தரும்.

அதிஷ்டநாட்கள்: ஜூன் 17,21,29,30
ஜூலை 4,5,9,10,14

துரதிஷ்டநாட்கள்: ஜூன் 23,27,28
ஜூலை 7,8




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 5ல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருவது நன்மை தரும். இவருடன் வியாழ பகவானும் சேருவதும் சிறப்பாகும். இவர்களின் உடல் நலம், குடும்பநலம் என்பவற்றில் முன்னேற்றம் உண்டாகும். பொருள் வருமானமும் கூடும். எடுத்த முயற்சிகளிலெல்லாம் சித்தியும் பெறுவர். உறவினர் நண்பர்கள் புத்திரர் முதலியோரின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். பொதுவாக வீட்டில் மங்களகரமான மகிழ்ச்சியும் நிலவும். இராசாங்க உதவிகளையும் பெறுவர். ஏழரைச்சனி காலமும் தொடங்குவதால் சிலருக்கு ஏமாற்றம், அலைச்சல் பொருள் நட்டம் குடும்பத்தொல்லைகள் முதலியனவும் கலந்து நிகழவும் கூடும்.

குடும்பத்தில் பெரும்பாலும் அமைதி ஏற்படும். குடும்ப வருமானமும் கூடும். புத்திரர் முதலிய உறவினர்களுக்குள் விவாகாதி மங்கள கொண்டாட்டங்களும் நிகழும். சிலர் புண்ணியத்தல யாத்திரைகள்கூடச் செய்வர்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். முதலீடுகளில் வருமானம் வரத் தொடங்கும். கடன் நிலுவைகளால் வீண் செலவு களும் அலைச்சல்களும் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலமும் குருசேர்க்கையும் பெறுவதால் மேலதி காரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். சிலர் பதவி உயர்ச்சிகூடப் பெறுவர்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் கணிசமாக அதிகரிக்கும். விளைவுகளுக்கு நல்ல சந்தைவாய்ப் பும் கிடைக்கும். விவசாயப் பண்ணைகளிலும் வரு மானம் கூடும். ஆனால் எதிர்பாராத திடீர் செல வுகள் கூட இடம்பெறவும் கூடும்.

தொழிலாளர் மத்தியில் நல்லிணக்கம் உண் டாகும். வேலைவசதிகளும் அதிகரிக்கும். இவர் களின் நாளாந்த வாழ்க்கைத் தேவைக்குப் போதிய வருமானம் பெறுவர். தொழில் ஒப் பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் இந்தமாதமும் தொடரும். ஆசிரியர்கள் மாணவர் கருத்துவேறு பாடுகள் நீங்கும். கலைத்துறை, சட்டத்துறை மாணவர் சிறப்புச்சித்திகள்பெறவாய்ப்பான காலம்.

பெண்களுக்கு இந்த மாதத்திலும் பெரும் பாலும் காரியசித்திகள் உண்டாகும். விவாகமாக தவர்களுக்கு விவாகசித்திகள்கூட ஏற்படும். குடும்பப்பெண்களுக்கு மனநிறைவான சம்பங்கள் குடும்பத்தில் நிகழும்.

அதிஷ்டநாள்: ஜூன் 15, 19, 22, 23
ஜூலை 2, 3, 7, 8, 12, 16
துரதிஷ்டநாள்: ஜூன் 25, 26, 29, 30
ஜூலை 9, 10




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 4ல் லோகமூர்த்தியாகப் பலக் குறைவுடன் வலம்வருவது நன்மை தராது. பெரும் பாலும் இவர்களின் தேகநலம், குடும்பநலம் என் பன இடைக்கிடை பாதிப்படையும். பொருள் வருமானமும் குறைவுறும். சிலருக்கு இரசாகி கத்தால் துன்பங்களும் ஏற்படும். புத்திரர், உற வினர்களின் துன்பங்கள், பகைவிரோதங்களும் உண்டாகும். எனினும் ராகு, புதன், சுக்கிரன், சனி இவர்களின் சுபகோசாரசஞ்சாரம் நிகழுவ தால் விற்றல் வாங்கல் மூலம் லாபங்கள். அந் நியர் உதவி, அந்நியதேசப் பொருள்வரவு, வீட் டுச்சிறப்பு முதலியனவும் நிகழச் சாத்தியமுண்டா கும்.

குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் தோன்றி மறையும். குடும்பவருமானமும் குறைவுறும். இன சனபந்துக்களுடன் பகைவிரோதங்கள்கூட உண் டாகும். குடும்பச் செலவுகளும் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். தானியவகை, ஆடை அலங்காரப் பொருள்கள் வியாபாரம். செய்வோர் அதிகலா பம் பெறுவர். கடன் நிலுவைகளைக் குறைப்ப தால் முதலீடுகளிலும் வருமானம் வரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்துமோதல் ஏற்படும். வேலைப்பொறுப்புக்க ளும் கூடும். அதிகாரிகளின் நம்பிக்கை பெறுவதும் கடினம்.

விவசாயிகளுக்குச் சனிபகவான் பலம் பெறு வதால் பயிர் செழிப்பும் விளைச்சலும் மனநிறை வைத் தரும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். நல்ல சந்தை வாய்ப்பும் கிடைப் பதால் லாபமும் பெறுவர்.

தொழிலாளர்களுக்கு இந்த மாதமும் வேலை வசதிகள் கிடைக்கும். போதிய வருமானமும் பெறுவர். தொழில் பிணக்குகள் பெரும்பாலும் நீங்கிவிடும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் இந்தமாத மும் தொடரும். ஆனால் ஆசிரியர் மாணவர்களுக் கிடையில் கருத்துவேறுபாடுகளும் ஏற்படும். சுய முயற்சிகளால் பரீட்சைகளில் சிறப்புச் சித்தி பெறமுடியும்.

பெண்களுக்குப் பிறர் தலையீடுகள் பெரும் மன வேதனைகளைக் கொடுக்கும். எந்த முயற்சி யிலும் தடைதாமதங்கள் ஏமாற்றங்கள் ஏற்ப டவே செய்யும். விவாகப் பிரச்சினைகளும் முடிவு பெறுமல் வளரும்.

அதிஷ்டநாள்: ஜூன் 16, 17, 21, 25, 26
ஜூலை 4, 5, 9, 10, 14
துரதிஷ்டநாள் ஜூன் 15, 26, 27, 28
ஜூலை 2, 3, 12

# ஜாதகத்தில் வியாபாரம்

வி. எஸ். வேலாயுதன்
துறைநீலாவணை.

இன்று மக்கட்சமூகத்தில் பெரும்பாலோர் வியாபாரம் செய்வதிலேயே அதிக நாட்டம் செலுத்துகின்றனர். அரச உத்தியோகத்தர், செல்வந்தர், பாமரர் ஆகிய பலதிறத்தினரும் வியாபாரத்தை முழுநேர உழைப்பாகவோ அல்லது பகுதிநேர உழைப்பாகவோ கருதிச் செயற்படுகின்றனர். ஆனால் எல்லோரும் இத்துறையில் வெற்றி பெறுவர் எனத்துணியவியலாது. இவர் வியாபாரத்தில் முனைப்போடு ஈடுபட்டுப் பெருநிதி ஈட்டவும் பலர் எதிர்பாராதவகையில் முதல் இழந்து பலவகைக் கஷ்டங்களையும் எதிர்நோக்குகின்றனர். இதற்கு ஒரேகாரணம் ஜாதகத்தில் வியாபாரத்தைக் குறிக்கும் கிரகநிலைகள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைந்திருப்பதுதான். ஆதலால் வியாபாரத்தொழிலில் ஈடுபடவிரும்புவோர் முதற்கண் தம்து ஜாதகத்தைச் சரிபார்த்துக் கொள்வது அவசியமாகும். அதாவது ஜாதகத்தில் அத்தகைய தொழில் முயற்சிக்குப் பலன் உண்டா? இல்லையா? என்பதைத் திர்மானித்துக் கொள்வது அவசிய கடமையாகும்.

வியாபாரம் வெற்றிகரமாக நடைபெற ஜாதகத்தில் இலக்கினம், சந்திரலக்கினம், சூரியன், புதன், குரு, சனி ஆகிய கிரகங்கள் பலம் பொருந்தி இருக்கவேண்டும். அன்றியும் 2,4,7, 10,11,12-ம் இடங்களின் பலமும் அவசியம் வேண்டற்பாலதாகும். இவற்றை இங்கு சுருக்கமாக நோக்குவோம்.

## இலக்கினம்

ஜாதகத்தில் இலக்கினம் முக்கிய இடத்தை வகிப்பது நாம் அறிந்ததேயாம். கட்டை விரல் போன்று இலக்கினம் பிரதான இடத்தை வகிக்கின்றது. (ரேமர் இனத்தவர்கள் கட்டைவிரலைக் கொண்டே கைரேகைப்பலன் அறிவார்களாம்; அது வேறு விடயம்) இலக்கினம் என்னுமிடத்து இலக்கினாதிபனின் இருப்பு, ஆதிபத்தியம், உறவு, திருஷ்டி-பார்வை-நோக்கு அனைத்தும் கருத்தில் கொள்ளப்படும். வியாபாரம் ஸ்திரமாக - உறுதியாக அமைவதற்கு இலக்கினம் பலம்பொருந்தி இருப்பது அவசியமாகும்.

## சந்திரன்

இலக்கினத்துக்கு அடுத்தபடியாகச் சந்திரனின் பலாபலம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். சந்திரன் மனோகாரகன் ஆதலால் சந்திரனின் நிலையைக்கொண்டு வியாபாரத்தை நடத்துபவனின் மனப்பாங்கை மனோநிலையை அறியலாம். மனஉறுதி இல்லாதவிடத்து வியாபாரத்தில் செய்தொழிலில் உயர்ச்சி காணவியலாது. பொதுசன அபிமானம் ஆதரவைப் பெறுவதற்கும் மனம் நல்லமுறையில் அமைந்திருப்பது அவசியமாகும். ஆதலால் சந்திரன் வியாபாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறார் என்பது நன்கு தெளிவாகும். இவர் தானியங்களுள் நெல், அரிசி, ஆகியவற்றையும், நவரத்தினங்களுள் முத்தையும், உலோக வர்க்கங்களுள் செம்பையும் காரகத்துவமாக உடையவராவார். மற்றும் துணிவகைகள் நீர்ப் பண்டங்கள், (Watary goods) மட்பாண்டங்கள் ஆகியனவும் இவரது ஆதிக்கத்துக்குட்பட்டவையாம். ஆதலால் இவற்றைக் கிரய-விக்கிரயஞ் செய்யும் வியாபாரிகளுக்குச் சந்திரன் பலமாக இருக்கவேண்டும்.

## சூரியன்

இவர் சக்தி, மனிதவலு இரண்டுக்கும் காரகத்துவம் பெற்றவர். வியாபாரம் முதலிய சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வோர்க்குச் சக்தியும், வலுவும் வேண்டற்பாலனவாகும். இன்னும் சூரியன் இராஜக்கிரகம் ஆகும். ஆதலால் வியாபாரிகளாகவுள்ளோர் அரசாங்க உதவி, தொடர்பு என்பவற்றைப் பெறுவதற்கு ஜாதகத்தில் சூரியன் பலவானாக இருப்பது அவசியமாகும். மற்றும் துணிவு, தைரியம், அந்தஸ்து, கௌரவம், அதிகாரம் என்பவற்றுக்கும் இவரே பொறுப்பாவார். எனவே சூரியனின் பலம் வியாபாரி ஒருவர்க்கு வேண்டற்பாலதாகும் என்பது தெளிவாகும். இவர் உலோக வர்க்கங்களுள் பொன்னையும், நவரத்தினங்களுள் மாணிக்கத்தையும் துணிகளுள் கம்பளி, பட்டு என்பவற்றையும் மருந்து வகைகளையும் காரகத்துவப்படுத்துவார். ஆதலால் இவற்றை வியாபாரப் பொருட்களாகக் கொண்டு ஆதாயம்பெற விரும்புவோர் ஜாதகத்

தில் சூரியன் மிக்க பலவானுகை இருப்பது அவசிய மாகும்.

## புதன்

இவர்தான் வியாபாரத்திற்குக் காரகத்துவம் பெறும் முக்கியஸ்தர். சிறுவியாபாரி முதல் பெரும் வர்த்தகர் வரையுள்ள அனைவரது ஜாதகத்திலும் புதன் பலவானுகை இருப்பார். அத்துடன் மனே சக்தி, மதிநுட்பம், திட்டமிடுதல், கணிதவிற்பன்னம் ஆகியவற்றை வழங்குபவராகவும் புதன் விளங்குகின்ருர். வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர்க்கு இவ்வம்சங்கள் நிச்சயம் வேண்டற்பாலனவாகும். இவர் நவரத்தினங்களுள் நீல மணியையும் (Saphire) பஞ்சலோகங்களுள் பித்தளையையும் தமது ஆதிக்கத்துக்குட்படுத்துவார். இவற்றைக் கிரய - விக்கிரயஞ்செய்யும் வியாபாரிகட்கு ஜாதகத்தில் புதன் பலமாக இருப்பது விரும்பத்தக்கதாகும். மேலும் வியாபாரத்துக்கு இன்றியமையாத வாக்குவன்மை, பேச்சுத்திறன் என்பவற்றுக்கும் புதன் சுபத்துவம் பெறுதல் வேண்டும். சுருங்கக்கூறுமிடத்து விளம்பரத்திறன் சமாத்காரமாகப்பேசும் இயல்பு ஆகியவற்றுக்குப் புதன் பொறுப்பாக இருப்பார் என்பதாம்.

## சனி

வியாபாரம் மட்டுமல்லாது அனைத்துத் தொழில்களுக்கும் உழைப்பும் முயற்சியும் தேவை. இவை இரண்டிற்கும் காரகத்துவமாக இருப்பவர் சனி. எனவே ஒருவர் வியாபாரத்தில் உயர் நிலை அடைவதற்கு ஜாதகத்தில் சனி பலமாக அமையவேண்டும் என்பது பெறப்படும். சனி பல வீனமாக இருந்தால் உழைப்பும் ஊக்கமும் குன்றி முதலிழந்து நிற்கவேண்டிய அவலநிலைதான் ஏற்படும். மேலும் வியாபாரத்துக்கு இன்றியமையாத பொதுசன ஆதரவு, பிரபலம் ஆகியவற்றுக்கும் சனிதான் காரணமாக அமைகிருர். ஆதலால் வியாபார முக்கியஸ்தர் ஒருவரின் ஜாதகத்தில் சனி பலம்பொருந்தி இருக்கவேண்டும் என்பது ஒருதலைத்துணிபாகும். இவர் உழுந்து முதலிய கறுப்புத் தானியங்களையும், உலோக வர்க்கங்களுள் இரும்பையும், நவரத்தினங்களுள் நீலஇரத்தினங்களையும் காரகத்துவமாக உடையவர். ஜாதகத்தில் சனி ஆதிக்கம் பொருந்திக் காணப்படுமிடத்து இப்பொருட்களின் கிரய - விக்கிரயங்களால் கூடிய ஆதாயம் பெற்றிடலாம்.

## வியாழன்

இவர் தனகாரகன் ஆவார். அதாவது வியாபாரத்திற்கு மிக இன்றியமையாத நிதிக்குக் காரகத்துவம் பெற்றவர் என்பதாம். மேலும் வியாபாரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய உண்மை, நேர்மை என்பவற்றைப் பேணி நடக்க உதவுபவரும் இவரே ஆவர். ஜாதகத்தில் குரு பலவீனமாக அமையும்போது வியாபாரத்தில் கறுப்பு மார்க்கட், கலப்படம், மோசடி என்பன மேலோங்கி நிற்கும். இவர் உலோகவர்க்கங்களுள் தங்கத்தையும், நவரத்தினங்களுள் புஷ்பராகத்தையும், தானியங்களுள் பச்சைக்கடலையையும் காரகத்துவமாக உடையவர். இவற்றுடன் வங்கித்தொடர்பு, வங்கிக்கணக்கு ஆகிய இரண்டும் இவரது பிரதான காரகத்துவங்களாக அமையும்.

இவற்ருேடு ஜாதகத்தில் 2,4,7,10,11,12 -ம் இடங்களின் பலாபலன்களையும் கவனத்தில்கொள்வது அவசியமாகும். தொடர்ந்துவரும் மலர்களில் அவற்றையும் அனுபவ ஜாதகங்களையும் ஆராய்வாம். (வளரும்)

---

கோவில் மண்டபத்தில்...... (21-ம்பக்கத்தொடர்)

கி. அருணேசர், மன்ஞர்.

சந்:- நட்பாட்சி, உச்சம்பெற்ற சனி 2-ம் தானத்தை நோக்கினுலும் கல்வியில் தடை ஏற்படுமா?

நிவி:- சனி பெலம்பெற்ருே அல்லது குன்றியோ இருப்பினும் சனி திருஷ்டிக்கும் இடங்களுக்கு தீயபலனையே செய்வார். 2-ம் வீட்டைச் சனி நோக்கினுல் கல்வியில் தடை உண்டாகும். உயர்கல்வி அசாத்தியமே.

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட்காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டுமே கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில், சாவகச்சேரி.

---

முக்கிய குறிப்பு:-

'சோதிட மலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். ஆ—ர்

---

# வெளிநாட்டு வாய்ப்புண்டா?

ஐ. வைத்தியநாதர் B.Sc. முள்ளானை, இளவாலை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## உங்கள் வெளிநாட்டுப் பயணத்துக்கு உரிய கிரக அமைப்பு

(கிரகநிலை, நவாம்சநிலை, சந்திரராசி ஆகிய வற்றை எடுத்து நோக்கவும்)

1. உங்கள் சாதகத்தில் இருந்து எண்ணும் பொழுது. (வலம்சுழியாக) 9-ம் வீட்டுக்குடைய கிரகமும், 12-ம் வீட்டுக்குடைய கிரகமும் சர ராசியில் இருத்தல் வேண்டும். நவாம்ச நிலை யிலும் இதனை அவதானிக்கவும். அதிலும் இவ்வாறிருத்தல் நன்மை தரும். சந்திரன் நின்ற இராசியிலிருந்தும் இவ்வாறு கிரக அமைப்பு உள்ளதா என்பதையும் அவதானிக் கவும்.
2. இவ்வாறே கிரகநிலை, நவாம்சநிலை, சந்திர ராசி போன்றவற்றில் 9-ம்வீடும், 12-ம்வீடும் சரராசியாக இருத்தல் வேண்டும். சலராசி யாக இருத்தலும் நன்மை பயக்கும்.
3. 9-ம் வீட்டுக்குடையவர், 12-ம் வீட்டுக்குடை யவர் எந்த இராசியில் நிற்கின்றனரோ அந்த வீட்டு அதிபதிகளும் சரராசியில் இருத்தல் வேண்டும்.
4. சந்திரன் சரராசியில் இருத்தல் வேண்டும். சந்திரன் எந்தப் பட்சத்திலும் (வளர்பிறை, தேய்பிறை) இருக்கலாம். ஆனல் வளர்பிறைச் சந்திரன் நன்மை தரும்.
5. கற்கடக ராசியில் சந்திரன் உள்ளவர்கள் வெளிநாட்டு வாய்ப்பைக் கூடுதலாகக் கொண் டிருப்பர்.
6. சந்திரனுக்கும், 9-ம், 12-ம் வீட்டுக் கிரகங்க ளுக்கும் தொடர்பு இருத்தல் வேண்டும். சந்திரனுடன் சேர்ந்திருத்தல், சந்திரனல் பார்க்கப்படுதல் போன்றவை தொடர்பைக் குறிக்கும். சந்திரன், தான் இருக்கும் இராசி யில் இருந்து ஏழாவது வீட்டைப் பார்க்கும். ஏழாம் இல்லத்தில் 9-ம் வீட்டுக்குரிய கிரகம் அல்லது 12-ம் வீட்டுக்குரிய கிரகம் இருத்தல் வேண்டும். சில வேளைகளில் ஒரே இராசியில் இரு கிரகங்கள் இருப்பினும், அல்லது ஒன் றையொன்று பார்ப்பினும் தொடர்பு இல் லாத நிலையும் உண்டு. தொடர்பு உள்ளதா அல்லது இல்லையா என்பதை உங்கள் சாத கத்தைக் (கிரகஸ்புடம்) கொண்டு அறியலாம். அவ்வளவு சோதிட அறிவு உங்களுக்கு இப்போதைக்கு தேவையில்லை.
7. 12-ம் வீட்டில் உள்ள கிரகம் அந்த வீட்டு டன் நட்புடையதாக இருந்தாலும் 12-ம் வீடும் சர இராசியாகவும், சல இராசியாக வும் இருப்பினும் நன்று. மேலும் 12-ம் வீட்டு அதிபதி இருக்கும் வீட்டு அதிபதி மித்துரு வாக இருக்க வேண்டும்.
8. சர இலக்கினம் சல இராசியாயினும், இலக் கினதிபதி சர இராசிகளில் அல்லது சல இரா சிகளில் இருப்பதும் நன்று.
9. ஒவ்வொரு சாதகத்திலும் யோககாரகர்கள் என்று சில கிரகங்கள் உண்டு. கீழே உள்ள அட்டவணையில் ஒவ்வொரு இலக்கினத்திற் கும் உள்ள யோககாரகர்கள் தரப்பட்டுள் ளன.

| இலக்கினம் | யோககாரகர் |
|---|---|
| மேடம் | குரு |
| இடபம் | சனி |
| மிதுனம் | வெள்ளி |
| கர்க்கடகம் | செவ்வாய் |
| சிங்கம் | செவ்வாய் |
| கன்னி | வெள்ளி |
| துலாம் | சனி |
| விருச்சிகம் | குரு, சந்திரன், சூரியன் |
| தனுசு | செவ்வாய் |
| மகரம் கும்பம் | வெள்ளி |
| மீனம் | செவ்வாய் |

மேற்கூறப்பட்ட இலக்கினங்களுக்கு இராச யோகத்தைத் தரக்கூடிய கிரகச் சேர்க்கைகளை கீழே காணலாம்.

| இலக்கினம் | கிரகச் சேர்க்கை |
|---|---|
| மேடம் | குரு, சூரியன் |
| இடபம் | சனி மட்டும் |
| மிதுனம் | சனி வெள்ளி |
| | வெள்ளி, புதன் |
| கடகம் | குரு, செவ்வாய் |
| | சந்திரன், செவ்வாய் |
| சிங்கம் | செவ்வாய், சூரியன் |

| | |
|---|---|
| | செவ்வாய், குரு |
| கன்னி | வெள்ளி, புதன் |
| துலாம் | புதன், சனி |
| | புதன், சந்திரன் |
| விருச்சிகம் | சூரியன். சந்திரன்.செவ், |
| தனு | செவ்வாய், குரு |
| | சூரியன், செவ்வாய் |
| மகரம், கும்பம் | வெள்ளி, புதன் |
| கும்பம் | வெள்ளி, செவ்வாய் |
| மீனம் | செவ்வாய், சந்திரன் |

மேற்கூறப்பட்ட யோககாரர்களால் 9, 12-ம் வீடுகளின் அதிபதிகள் பார்க்கப்பட வேண்டும் அல்லது இவை 9, 12-ம் வீட்டதிபதிகளுடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

10. 12-ம் வீட்டு அதிபதி உச்சம், ஆட்சி வர்க்கோத்தமம், மூலத்திரிகோணம் ஆகி இருத்தல்; 12-ம் வீட்டு அதிபதியுடன் ராகு, கேது, சனி, போன்றவற்றிற்கு தொடர்பு இருத்தல், 12-ம்வீட்டு அதிபதி உச்ச நவாம் சம் அடைதல் போன்றவை உகந்தவை.

11. பன்னிரண்டாம் வீட்டில் ராகு. கேது, சனி செவ்வாய், சூரியன் இருப்பினும் வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு. கும்ப இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குக் கூடுதலான வாய்ப்பைக் குறிக்கும். விருச்சிக இலக்கினத்தில் பிறந் தவர்களுக்கு சிலகாலம் சென்று வர இவ்வ மைப்பு ஏதுவாகும்.

12. இலக்கினாதிபதி, 4-ம்வீட்டுக்குரியகிரகம் 12-ம் வீட்டில் இருப்பினும் வெளிநாடு செல்லும் பலன் உண்டு.

13. ராகு, கேதுக்கள் 4, 9, 12-ம் வீட்டுடன் தொடர்பு உள்ளவர்களாக இருப்பினும் அல்லது 12-ம் வீட்டில் இருந்து எண்ணும் பொழுது இவர்கள் இருக்கும் நிலைகள் 4வது 9வது, 12வது ஆகக் காணப்படினும், வெளிநாட்டுப் பயணத்தை உண்டாக்குவர்.

14. 1, 9, 12-ம் வீட்டுக்குரிய கிரகங்கள் சுபபலம் மிக்கவர்களாய் இருப்பின், வெளிநாட்டுப் பயணத்தால் ஆதாயம் உண்டு. சுபபலம் என்பது! ஒரு கிரகம் உச்சம், மூலத்திரி கோணம்! ஆட்சி, நட்பு, மித்துரு சேர்க்கை பார்வை, சுபர்களின் பார்வை (சுபர்கள். குரு சுக்கிரன், பூர்வபக்கச் சந்திரன், சுபருடன் கூடிய புதன்), கேந்திரங்களில் இருத்தல் (1, 4, 7, 10), திரிகோணத்தில் இருத்தல் (1, 5, 9), வர்க்கோத்தம் நவாம்சத்தில் உச்ச மாக, ஆட்சியாக, நட்பாக, இருத்தல் நவாம் சத்தில் கெடாதிருத்தல், நீசம், பகை, சத்துரு வீட்டில் அல்லது யோககாரகராக அமைந்து 6, 8 இல் மறையாதிருத்தல் போன்றவை சுபபலனைக் குறைக்கும்; பரிவர்த்தனம்பெற்ற கிரகங்கள் சில வீடுகளில் மட்டும் நல்ல சுப பலத்தைக் கொண்டிருக்கும். 2-ம் வீடு, 11-ம் வீடு சுவஷேத்திரங்கள் அல்லது உச்ச வீடு களாயினும் சுபபலம் ஓரளவுக்கு உண்டு.

15. தொழில் பார்ப்பதற்கு வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு 10-ம் வீட்டு அதிபதிக்கும் 9-ம், 12-ம் வீட்டு அதிபதிகளுக்கும் நல்ல தொடர்பு இருத்தல் வேண்டும்.

16. கல்வி நிமித்தம் வெளிநாடு செல்ல வேண்டு மாயின் 2, 4, 5 ஆகிய அதிபதிகளுக்கும் 9-ம் அதிபதி, ஆகியவற்றிற்கும் தொடர்பு இருத் தல் அவசியம். புதன் பலம் அடைந்திருத்தல் அல்லது புதன், சூரியன் சேர்ந்து 1, 4, 8 இல் இருத்தல் போன்ற நிலைகள் படிப்புக்கும் பட்டம் பெறுவதற்கும் உதவியாக அமையும்.

17. 6-ம் வீட்டுக்குரிய கிரகத்திற்கும் 9-ம் வீட்டிற் குரிய கிரகம், 12-ம் வீட்டிற்குரிய கிரகம் போன்றவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பின் வெளிநாடு சென்று நல்ல பணம் சம்பாதிக்க முயற்சிக்கலாம். கிரகங்களின் நிலைமைக்கு ஏற்ப பகைமை காரணமாக பணம் சம்பாதிக்க முடியாமல் நாடு திரும்ப வும் கூடும்.

18. வெளிநாடு சென்று நல்ல வேலை அமைய வேண்டுமாயின் 10-ம் வீட்டுக்குரிய கிரகமும் 10-ம் வீடும், சூரியன் நிலையும் சிறப்படைந் திருத்தல் மிக அவசியம்.

19. யோககாரகரின் திசை, புத்தி நடக்கும் பொழுதும் வெளிநாட்டுப் பயண வாய்ப்பு உண்டாகும். சனீஸ்வரன் யோககாரகனாக அமையும் பொழுது பயணம் நீண்டதாக அமையும்.

20. கோசாரப்படி 5, 9, 12-ம் வீடுகளுக்கு வியா ழன் வரும் பொழுது வெளிநாடு சென்று வரலாம். நீண்ட பயணமாக அமையாது.

21. சல ராசிகளில் வியாழன் கோசார முறைப் படி வரும்பொழுது வியாழன் நின்ற நட்சத் திரம் சாதகமாக அமைந்தால் வெளிநாட்டுப் பயணத்திற்கு வாய்ப்புண்டு. மேலும் சல இராசிகள் 2. 5, 7, 9, 11 ஆக இருத்தல் அவசியம்.

(வளரும்)

# கோவில் மண்டபத்தில் திருமணம் நடாத்தலாமா?

கு. ரவீந்திரன், காங்கேசன்துறை.

சந்:- லண்டனில் 17-11-89 பகல் 2-26க்குப் பிறந்த ஒரு குழந்தையின் உதயலக்கினம் ''மிதுனம்'' என ஒரு சோதிடரும் ''தனுசு'' என ஒரு சோதிடரும் கணித்துள்ளனர். இதில் எது சரியானதென அறியத்தாருங்கள்.

நிவி:- நீங்கள் குறிப்பிட்ட இரு சோதிடர்மாரும் பிழையாகவே ஜாதகத்தைக் கணித்துள்ளனர். அவர்கள் லண்டனில் பிறந்த பிள்ளைக்கு ஜாதகம் கணிக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் பிறந்த பிள்ளைக்கே ஜாதகம் கணித்துள்ளனர். ஒருவர் லண்டன் நேரத்துடன் 5-30 மணியைக்கூட்டி இலங்கை நேரத்துக்கும், மற்றவர் லண்டன் நேரத்திலிருந்து 5-30 மணியைக் கழித்து இலங்கை நேரத்துக்கும் குறிப்பெழுதியுள்ளனர். யாழ்ப்பாண நேரத்துக் குறிப்பெழுதும் இருவருக்குள்ளேயும் முரண்பாடுகள்.

ஜாதகம் பிறந்த இடத்தை மையமாகக் கொண்டே கணிக்கப்படவேண்டும். நேரத்தை மாற்றம் (Convert) செய்யக்கூடாது. 17-11-1989 அன்று லண்டனில் சூரிய உதயம் காலை 7-19மணியாகும். எனவே சூரியன் உதிக்கும்போது விருச்சிக லக்கினம் உதயமாகும். அதன்படி உதயாதி பதி நாழிகை கணித்து இராசிமானத்துடன் கூட்டினால் 'மீனம்' உதயலக்கினமாக அமையும். இதுவே குழந்தையின் சரியான உதயலக்கினம்.

---

**'சந்தேக நிவிர்த்தி'** உத்தரம்

---

பிறநாடுகளில் பிறந்த குழந்தைகளின் ஜாதகங்களை அதிகமான சோதிடர்கள் தவறாகவே கணிக்கிறார்கள். இவர்கள் லண்டனில் பிறந்த குழந்தைக்கு இலங்கையிலிருந்து எழுதும்போது ஒரு குறிப்பும், அமெரிக்காவிலிருந்து எழுதும்போது வேறொரு குறிப்பும், கனடாவிலிருந்து கணிக்கும்போது இன்னொரு குறிப்புமாக ஒரு குழந்தைக்குப் பல குறிப்புகள் கணித்துவிடுவார்கள். ஒரு குழந்தைக்கு ஒரு ஜாதகக் குறிப்பு மட்டுமே இருக்கவேண்டும். அது பிறந்த இடத்தைக் கொண்டே கணிக்கப்படவேண்டும். எனவே உங்கள் குழந்தையின் உதயலக்னம் 'மீனம்' என்பதைக் குறிப்பிட்ட சோதிடர்மாருக்கு விளக்கிக் கூறவும். தவறுகள் இனிமேலாவது திருத்தப்படுவது வரவேற்கத்தக்கது.

ஓர் அன்பர்

சந்:- புனிதமான திருமண மாங்கல்யதாரண வைபவத்தை (தாலி கட்டுதல்) வீட்டில் வைப்பதைவிட தெய்வ சந்நிதானத்தில் வைப்பது நல்லதா? கோவிலில் மாங்கல்யம் தரிப்பதால் ஏற்படும் நன்மை தீமைகளை விளக்குக.

நிவி:- ஆன்மா லயப்படுவதற்கு உரிய இடம் தான் ஆலயம். எமது இன்ப துன்பங்களை மறந்து மனத்தை ஒருவழிப்படுத்தி வழிபடுவதற்குரிய இடமாகும். மேலும், இறைவனுக்குரிய வழிபாடுகள், அபிஷேகங்கள், உற்சவங்கள் என்பன நடாத்துவதற்கே ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இறைவனின் விழா மட்டுமே ஆலயத்தில் இடம் பெறவேண்டும்.

எமது திருமணம் முதலிய விழாக்கள் வீட்டிலேயே செய்யப்படவேண்டும். இவற்றை ஆலயத்தில் செய்வது தவறு. மேலும் நாம் ஆலயத்துக்குச் செல்லும்போது ஆண்கள் வேட்டி சால்வையுடனும், பெண்கள் தமக்குரிய உடையணிந்தும் ஆசாரத்துடன் சென்றே வழிபாடு செய்வோம். ஆலயத்தில் திருமணம் நடக்கும்போது மேற்குறிப்பிட்ட ஒழுங்குடனும், மனக்கட்டுப்பாட்டுடனும் செல்வோமா? இல்லை. திருமணப்பந்தலில் இருக்கும்போது கோவிலில் தான் இவ்வைபவம் நடக்கின்றது என்பதை மறந்தே இருப்போம். சில ஆலயங்களில் இதற்கெனத் தனியாக ''கல்யாண மண்டபம்'' அமைத்துள்ளார்கள். அங்கு திருமணத்தைச் செய்வது நன்று. அதன்பின் ஆலயத்தில் வழிபாடு செய்யலாம்.

மேலும் சிலர் திருமணத்தை கோவிலில் செய்வதென்று நேர்ந்ததாகக் கூறுவார்கள். ஆலயத்தில் இறைவனுக்கு அபிஷேகம், அர்ச்சனை என்பன செய்வதற்கு நேர்த்திக்கடன் வைக்கலாமே தவிர எமது விழாக்களை வீட்டிலே வைப்பதே சாலவும் சிறந்தது.

எஸ். வி. சிவானந்தன், வியாபாரிமூலை.

சந்:- நவக்கிரகதோஷங்கள் யாவும் நீங்க என்ன வழிமுறைகளைக் கையாளவேண்டும்?

நிவி:- பொதுவாக நவக்கிரக தோஷத்துக்கு வீட்டில் நவக்கிரக சாந்திசெய்து தானங்கள் வழங்கி, தோஷநிவிர்த்தி செய்யலாம். நவக்கிரகங்கள் இருக்கும் ஆலயத்துக்குச் சென்று அக்கிரகங்களுக்கு அர்ச்சனை, வழிபாடு செய்யலாம்.

**************************************

# ஆய்வு மன்றம்

**************************************

வி. அருள் செல்வம், தருமபுரம்.

உங்கள் ஜாதகப்படி தொழில் ஸ்தானத்தில் சூரியன், ராகு சஞ்சரிப்பதால் அரச தொடர்புடைய மெக்கானிக் தொழில் சித்திக்க இடமுண்டு: அந்நியநாட்டுப் பிரயாணம் கிடைக்க வாய்ப்பில்லை.

செ. நடராஜா, அட்டாம்பிட்டிய.

உங்களுக்கு 1990 ஜூலை மாதத்தின் மேல் தொழில் கிடைக்க இடமுண்டு. தோஷம் எதுவும் இல்லை,

க. செந்தில்குமார் சம்பந்தபுர, மட்டக்குளி.

உங்கள் ஜாதகத்தில் சிறப்பான யோகங்களை அதிகம் காணவில்லையே. புத ஆதித்த யோகம் மாத்திரம் உண்டு. இது கல்வி தொழில் விருத்திகளைக் கொடுக்கும்; தாங்கள் குறித்திருந்த ஜனன கால திசையிருப்பு தவறானதாகும். ராகுதெசை தான் இருந்திருக்க வேண்டும். மேலும் 4-ம், 6-ம், 8-ம் வீடுகளைக் குரு பார்ப்பதால் வீடுவசதி, தொழில், ஆயுள்பலம் என்பனவுண்டு: தற்போது சனிமகாதெசை நிகழ்கின்றது. கடக லக்ன காரருக்கு சனி தெசை நற்பலன்களைத் தரவல்லதல்ல,

இ. கனகசிங்கம், மிருசுவில் வடக்கு.

தாங்கள் அனுப்பியுள்ள ஜாதக விபரங்களின் பிரகாரம் 1988 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் கிரக சுற்றோட்டங்கள், தசாபுத்தி என்பன அனுகூலமற்றதாகவே இருந்திருக்கின்றது. அதனால் உங்கள் பிள்ளை உங்களை விட்டு பிரிந்ததாகவே சொல்லவேண்டியுள்ளது. ஆண்டவனின் நியதிப்படியே யாவும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இ. சாந்தமூர்த்தி, மூளாய் றோட், வட்டுக்கோட்டை;

உங்களுக்கு இப்போது செவ்வாய் மகாதெசை நடைபெறுகின்றது. இவர் அட்டம ஸ்தானத்தில் இருப்பதால் இத்தசாகாலம் பலவகையிலும் நன்மை தரக்கூடியதாக இல்லை. 1993-5-24 ல் செவ்வாய் தெசை முடியும். அதன்மேல் ஓரளவு முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.

T. சிவகுமார் கொழும்பு.

உங்கள் ஜாதகப்படி 1992-2-19 வரை கேது மகாதசை நடைபெறுகின்றது. இதன்மேல்தான் திருமணம் கைகூடும். பெண் நல்ல நிறமும், கல்வியறிவும் நேர்மை, நிதானம் உடையவராகவும் இருப்பாள். திருமணம் மூலம் சொத்துக்கள் சேர இடமுண்டு; உங்களுக்கு நிரந்தரத் தொழில் உள்ளூரில் கிட்டும். உயர்ச்சி உண்டு. மனம் போன போக்கில் கேழ்விக்கணை தொடுத்தால் பதில் கிடைப்பது கஷ்டம்.

ஆ. சாந்தகுமார் 'செந்தில்', ஏழாலை மேற்கு.

உங்கள் ஜாதகத்தில் லக்கினத்திலிருக்கும் செவ்வாயால் தோஷமில்லை. மேலும் வியாழனுடன் சேர்ந்திருப்பது நன்று. களத்திரகாரகன் சுக்கிரன் 12ல் இருப்பதால் திருமணம் தள்ளிக் கொண்டுபோகும். எனினும் 1991-10-18 ன் மேல் இராகுதசை வெள்ளி புத்தியில் திருமணம் கைகூடலாம். பெண் நிறமாகவும், குணமாகவும் இருப்பாள்.

ம. இராஜேஸ்வரி, ஏழாலை கிழக்கு.

உங்கள் மகனுக்கு 1991 ம் ஆண்டிலிருந்து தொழில் சிறப்பும், முன்னேற்றமும் கிட்டும் அதன்மேல் பணவசதிகள் ஏற்படும்.

த. சர்வேஸ்வரன், நாச்சிமார் கோவிலடி

உமது ஜாதகத்தில் 2-ம் வீட்டில் சூரியன் புதன் சேர்ந்து புத ஆதித்தயோகம் பெறுவதால் கல்வியில் முன்னேற்றமுண்டு. 1991 ன் மேல் முன்னேற்றப் பாதையில் செல்லலாம்.

ஆ. ச. இராஜேந்திரம். சங்கிலியன் வீதி, நல்லூர்.

உங்களுக்கு இப்பொழுது கேதுதசை நடைபெறுகிறது: இது 1995-7-28 வரை இருக்கும். இக்காலத்துள் புதுவீடு வாங்கவோ, கட்டவோ பலன் இல்லை. அதன் மேல் யோகம் உண்டு ஆனால் வயது 81ஐத் தாண்டிவிடும்.

சி. பேரின்பவதி வேலணை கிழக்கு,

உங்களுக்கு தற்போது குருதசை சுக்கிரன் புத்தி 1991-ம் ஆண்டு முடியும் வரை நடக்கும் இக்காலத்துள் திருமணம் நடைபெறும். வெளிநாட்டுப்பலன் தற்போது இல்லை.

கு. சுரேஸ், கொட்டடி, யாழ்ப்பாணம்.

1990 செப்டம்பர் மாதத்தின் மேல் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு; பரீட்சையிலும் சித்தி அடைவீர்கள்.

அ. மேரிஸ்ரெலா, செல்வநகர், கிரிமலை.

ஜாதகிக்கு 7 ல் கேது இருப்பதும் சனி நோக்குவதும் விவாக விஷயத்தில் காலதாமதத்தை

ஏற்படுத்தும்; சனி கேது ஆகிய கிரகங்களுக்கு பிரீதி செய்யவும். கருமம் கைகூடும்.

ஜே. பெஸ்லிகா பெர்னாண்டோ, ஜெம்பட்டா வீதி கொழும்பு.

உங்களுக்கு பிறந்தியிலேயே விவாகம் நடை பெறும்.

மோ. அல்போன்சாபந்துலு ஜெம்பட்டா வீதி, கொழும்பு.

உங்கள் வாழ்க்கை அனேகமாக வாடகை வீட்டிலேயே நடக்கும். நிலையான சொந்தமான வீடு கிடைக்கும் பாக்கியம் இல்லை.

ம. வீரசூரியா தோப்பு, அச்சுவேலி.

உங்கள் மகனுக்கு 1992 முடியும் வரை காலம் நன்றாக இல்லை. தொழில், வருவாய் முதலியன சிறப்பாக இராது. அதன் மேல் நன்று.

இ.ஜெயா, பிரதானவீதி, பருத்தித்துறை.

1990 ஜூன் மாதத்தின் மேல் திருமணம் கை கூடும். 7ல் இராகு இருப்பதும், சனி 2ம் வீட்டை நோக்குவதும் தாமதத்தை ஏற்படுத்தும்.

ப.சாந்தினி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

தற்போது வெளிநாட்டுப் பிரயாணம் வாய்ப்பாக இல்லை 1992ன் மேல் தான் சாத்தியமாகும்

கு. ரமேஸ் கொட்டடி, யாழ்ப்பாணம்.

இவருக்கு கொம்பியூட்டர் சம்பந்தமான தொழில் நன்று. இது சம்பந்தப்பட்ட கல்வியில் ஈடுபடுத்தலாம்.

பொ. யேசுரட்ணம், செப்பல் ரோட், கொழும்பு-7

உங்களுக்கு ராகு, கேது ஆகிய இரண்டு பாம்புகளுக் கிடையில் எல்லாக் கிரகங்களும் அமைவதால் கால ஸர்ப்ப யோகம் உண்டு. எந்தக் கிரகங்களும் விசேடநன்மை செய்யக்கூடியதாக இல்லை.

ஆர். கிங்ஸ்லி, நயப்பனை தோட்டம், புஸல்லாவ;

உங்களுக்கு 10ல் செவ்வாய் இருப்பதால் நிலத்தோடு சம்பந்தப்பட்ட தோட்டம், நீர்ப் பாசனம் போன்ற தொழில்களே அமையும்.

ப. வேலுப்பிள்ளை, மாவிட்டபுரம்.

உங்களுக்கு 1990-5-26 முதல் செவ்வாய் தசை புதன்புத்தி நடக்கின்றது. ஜாதகத்தில் பணவருவாய்க்குரிய 2-ம் வீடு பாபகர்த்தரி யோகம் பெற்றிருப்பதால் வாழ்க்கையில் அதிக பொருளாதாரத்துடன் வாழும் சிறப்பு இல்லை. ஏனைய கௌரவம் முதலிய துறைகள் நன்றாகவே இருக்கும்,

சு. பகீரதன், மண்டைதீவு,

உங்களுக்கு 2-ம் அதிபதி செவ்வாய் 7-ல் இருந்தாலும், வியாழபார்வை இருப்பதால் செவ்வாய் தசையில் மாரகம் நிகழும் என்று சொல்ல முடியாது. பிள்ளைகளின் பலனையும் ஆராய்ந்து பார்க்கலாம்.

ந. சமலதாஸ். யாழ்ப்பாணம்:

ஜாதகத்தில் 2-ல் கேது இருப்பதால் படிப்பைத் தொடருவது கஷ்டம். 28 வயதின் மேல் திருமணம் கைகூட இடமுண்டு.

அ. லோகேஸ்வரன், தொண்டைமானாறு.

உங்கள் ஜாதகப்படி சனி மகரத்தில் (10-ம் வீட்டிலும்) சுக்கிரன் மீனத்தில் உச்சம் பெற்றும் இருக்கிறார்கள்.

சயந்தன், 198, கோவில் ரோட், மஸ்கெலியா.

உங்களுக்குத் திருமணப்பலன் உண்டு. 1990 ஆம் ஆண்டு முடிந்தபின் கருமம் நடைபெறும்.

செல்வி எஸ். கவிதா, வலந்தலை, காரைநகர்.

ஜாதகத்தில் 7-ம் வீட்டில் ராகு இருப்பினும், குருவின் பார்வை இருப்பதால் அதிக தோஷமில்லை. சொந்தமில்லாத இடத்தில் கணவர் கிடைப்பார். சில சந்தர்ப்பத்தில் வயதில் சற்றுக் குறைந்தவராக இருக்கக் கூடும். சனிதசை அதிகம் சிறப்பில்லை. புதன்தசை நன்மையளிக்கும் ஆசிரியத் தொழில் கிடைக்கலாம்.

திருமதி அ. வடிவாம்பிகை, தம்பகமம், பளை:

உங்களுக்கு 60 வயது வரை காலம் நன்மையாகத்தான் இருக்கிறது. அதன்மேல் சுக்கிர தசை நன்றல்ல.

எம். சோபனா, மெயின்வீதி, களுவாஞ்சிக்குடி.

உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் கிரகங்களில்லை. ஆயினும் பத்தாம் அதிபதி குருவின் பார்வை பெற்றிருப்பதால் ஆசிரியத் தொழில் ஓரளவு அமையும்.

செல்வி ப. சந்திரிக்கா, நாவலர் வீதி, யாழ்நகர்.

உங்களுக்கு வேலைவாய்ப்பு உள்நாட்டில் தான். அரசாங்க உத்தியோகம் கிடைக்கலாகும். 1992-ம் ஆண்டின்மேல் நன்று.

## சோதிட அறிவுப் போட்டி இல.3

போட்டி விபரங்கள்:–

* இங்கு மாதந்தோறும் மூன்று சோதிட விஞக்கள் தரப்படும். அவற்றிற்கான சரியான பதில்களனுப்பித் தெரியப்படும் ஒரு அதிஷ்டசாலிக்கு ஒருவருடகாலத்திற்கு 'சோதிட மலர்' (12 இதழ்கள்) இனும்.

* விஞக்களுக்கான பதில்களை கீழே தரப்படும் படிவத்தில் எழுதி; அதனை வெட்டி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி பின்வரும் முகவரிக்கு அனுப்புக.

முகவரி:- "சோதிட அறிவுப் போட்டி",
சோதிட மலர், திருக்கணித நிலையம்,
மட்டுவில் – சாவகச்சேரி.

* போட்டி முடிவு திகதி:- 01-07-90

**விஞக்கள்:**

ஃ தேவகுரு என அழைக்கப்படும் வியாழ பகவான் எந்தெந்த இராசிகளுக்கு அதிபதியாவார்?

ஃ ஆவணி மாதத்தில் ஜனனமான ஒரு குழந்தையின் ஜாதகத்தில் சூரியன் எந்த இராசியில் இருப்பான்?

ஃ களத்திரகாரகன் என்று அழைக்கப்படுகின்ற கிரகம் எது?

---

சோதிட அறிவுப்போட்டி இல· 3ன் விடைகள்:

1 ..........................................

2. ..........................................

3. ..........................................

பெயர் ..........................................

முகவரி ..........................................

..........................................

சோதிட அறிவுப்போட்டி இல.2-ன் விடைகள்

(1) நட்சத்திரம் அவிட்டம் 3-ம் பாதமாகவேண்டும்.
(2) சனி மகரத்தில் இருக்கவேண்டும்.
(3) கேது கடகத்தில் அமையவேண்டும்.

பல அன்பர்கள் சரியான விடைகளை அனுப்பியிருந்தார்கள்; அனைவருக்கும் எம் பாராட்டுக்கள். அவர்களுள் பரிசுபெறும் அதிஷ்டசாலி திரு. ரி. சொக்கலிங்கம் 40/2 கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். அன்னருக்கு 1 வருட சோதிட மலர் இனமாக அனுப்பிவைக்கப்படும்.

## சோமரும், சோதிடரும்

**சோமர்:** என்ன சோதிடரய்யா சௌக்கியமே?

**சோதிடர்:** என்ரை சௌக்கியம் இருக்கட்டும். நீர் தான் ஒரே கவலையாக இருக்கிற மாதிரி தெரியுது. என்ன சங்கதி. உமக்கென்ன கவலை அப்படி திடீரென்று வந்தது.

**சோமர்:** கவலை என்ன கவலை, என்ரை பெடியனுக்கு நல்ல சம்பந்தம் ஒண்டு வந்திருக்குது. அருமையான இடம்.

**சோதிடர்:** இது சந்தோஷப்படுகிற விஷயம். இதுக்குப்போய் ஏன் முகத்தை உம் என்று வைத்துக்கொண்டிருக்கிறீர்' ஏதாவது சீதண பாதனத்தில்?

**சோமர்:** செச்சாய் அப்பிடியில்லை. சீதணம் நல்ல சீதணம். ஒரே பிள்ளை. பெரிய சொத்துக்காரர்.

**சோதிடர்:** அப்பிடியெண்டால்?

**சோமர்:** இல்லைப்பாருங்கோ. சாதகங்களிலை விருட்சப் பொருத்தம் இல்லை எண்டு சொல்லுகினம். பிறகு பிள்ளை குட்டி சந்தானம்?

**சோதிடர்:** ஆர்காணும் சாதகங்களைப் பார்த்தது. விருட்சப் பொருத்தத்தை மட்டும் வைத்துக்கொண்டு பிள்ளை குட்டி பற்றி தீர்மானிக்க முடியாது காணும்.

**சோமர்:** அப்பபின்னே?

**சோதிடர்:** இஞ்சை பாரும் சோமரே! சாதகத்திலை விருட்சப் பொருத்தம் மட்டுமில்லை. 1, புத்திரகாரகன், 2. புத்திர ஸ்தானம், 3. சப்தாம்சம் எண்டு மூண்டு முக்கிய அம்சங்கள் இருக்கு. அதுகளை நல்ல தீர்க்கமாய் ஸ்புடம் பண்ணி சுத்தமாய் கணித முறையிலை கணித்துப் பார்க்க வேண்டும். சும்மாய் எழுந்தமானத்திலை ஒரு சின்ன நூலைப் பிடிச்சுக்கொண்டு வாயிலை வந்த மாதிரி சொல்லலாமே? சோதிடம் அது ஒரு பெரிய கலை. ஒரு பெரிய கடல் காணும்.

**சோமர்:** அப்படியே அதுதானே நானும் பார்த்தன் இப்படி கண்டபடி சொல்லுறதெண்டால் சோதிடர் எண்டு ஒருத்தர் தேவை இல்லையே!

**சோதிடர்:** சரி சரி நீர் போய் அந்த சாதகங்களைக் கொண்டு வாரும். வடிவாய் ஆராய்ஞ்சு பார்ப்பம். கவலையை விடும். போய் எடுத்து வாரும்.

**சோமர்:** அப்பிடியெண்டால் இப்ப பறந்து போய் எடுத்து வாறனே. கொஞ்சம் பொறுங்கோ.

— உதிஷ்டிரன்

பிரமோத புத்தாண்டே, அள்ளித் தா அமைதியினை.

உண்மை ஒளி வளர்க,
தருமம் தழைத்தோங்குக,
நாட்டு வளம் பெருகுக.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்று வேண்டுமல்லவா!

நற்பணிகள் தொடரவென நல்குங்கள் ஆதரவு

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233


## எம் இனிய அன்பு நெஞ்சங்களே!

உங்கள் கரங்களில் தவழ்ந்துவரும் இச் சோதிடமலர் என்றென்றும் வாடாமல் இனிய நறுமணம் வீசி சோதிட உலகின் திசைகாட்டியாகவும், நிர்க்கதியானோரின் நிதர்சனமாகவும், ஆதரவாளரின் உறுதுணையாகவும் தொடர்ந்தும் இருந்து வரச் செய்வது வாசகப் பெருமக்களாகிய உங்கள் கடமையல்லவா! இம்மலர் உங்கள் இல்லந்தேடிவர இன்றே சந்தாதாரராகுங்கள். இதுகாறும் சந்தாவைப் புதுப்பியாதவரும் சந்தாப்பணத்தைச் செலுத்திப் புதுப்பித்து நாளொரு பொழுதும் பெருகிவரும் பல்வேறு கஷ்டங்களின மத்தியிலும் இம்மலர் வெளிவர ஊக்கமளிக்க வேண்டுகின்றோம்,

### சந்தா விபரம்

இலங்கைக்கு மாத்திரம் வருடசந்தா ரூபா 70-00
மலேசியா (விமானவழி) வருடசந்தா ,, 230-00
இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் வருடசந்தா ரூபா 270-00

தனிப் பிரதி வேண்டுவோர்: ரூபா 5-75க்கு காசோலையோ, தபாற்கட்டளையோ அல்லது முத்திரையோ அனுப்பிப்பெற்றுக்கொள்க.

கடிதம் முதலியன அனுப்பப்பட வேண்டிய முகவரி:
முகாமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.


Edited by K. Sathasiva Sarma; Published by S. Jegatheeswara Sarma Printed at Thirukkanitha printing works Madduvil, Chavakachcheri; Sri Lanka.